PP APPROVAL RECORD

# Planning Permission

Thummanatty

The Nilgiris district, Tamil Nadu

APPROVAL TYPE
**Building Plan**

ISSUING AUTHORITY
**Rural Panchayat**

PURPOSE
**Residential**

The approval as the planning authority issued it, reproduced in full behind this page.

An approval speaks to what was sanctioned, not to what was built. Completion is a separate record.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India

hello@verified.realestate
+91 9996 12 9996
verified.realestate

# பெரிய கோயிலெடுத்த சோழப் பேரரசர்

வினா எண் 1

1. ராஜ ராஜ சோழரைப் பற்றி குறிப்பு வரைக.

விஜயாலய வம்சத்தின் எட்டாவது மன்னராகப் பட்டத்துக்கு வந்த ராஜராஜ சோழர், தென்னக மன்னர்களிலேயே தலைசிறந்தவராக விளங்கினார். சிறந்த வீரர் என்பதோடு மட்டுமல்லாமல், மிகச் சிறந்த ஆட்சியாளராகவும் திகழ்ந்தார். பலம் வாய்ந்த கப்பல் படையைக் கொண்டு இலங்கையையும் மாலத்தீவுகளையும் தம் வசமாக்கிக் கொண்டவர் ராஜராஜர். அவரது ஆட்சிக் காலத்தில் சோழ ராஜ்யத்தின் பரப்பு, வடக்கே நர்மதை நதிக்கு அப்பாலும் வியாபித்திருந்தது. தஞ்சைப் பெரிய கோயிலை உருவாக்கி, மக்களின் மனத்திலே நிலைத்துவிட்ட பாரத வீரர் ராஜராஜ சோழர்.

2. தஞ்சைப் பெரிய கோயில் குறித்து எழுதுக.

தென்னகத்திலே புகழ்பெற்ற தஞ்சை பெரிய பிரகதீஸ்வரர் ஆலயம் 96 அடி சதுரமான கீழ்த்தளத்தின் மேலாக, 203 அடி உயரமான போபுரத்தை எழுப்பி, அதன் உச்சியில் (25.5 அடி சதுரம்) ஒரே கல்லால் ஆனதோர் சிகரத்தை ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. இந்த வலிமை மிக்க பெருமைக்கு உரியவர் ராஜராஜ சோழர்.

3. தஞ்சைப் பெரிய கோயிலை சோழன் எழுப்ப நினைத்த காரணத்தை விவரி. (அல்லது) இந்தக் கோயில் உருவானதில் உருவாக்கியதில் ஒரு சுவாரஸ்யமான கதை உண்டு, அது யாரைப் பற்றியது? அது குறித்து எழுதுக.

ஒரு சமயம் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார் மன்னர். பிழைத்து எழுந்தால் பெரியதொரு கோயில் கட்டுவதாக வேண்டிக் கொண்டார். அதன்படியே நோய் தீர்ந்து, எழுந்ததும் எம்பிரானுக்கு மிகப் பெரிய ஆலயம் எழுப்பினார் என்பதாக ஒரு கதை உண்டு. இதற்கு சிவபக்தியே காரணம் ஆகும்.

4. சிற்பியின் வீடு எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?

பல்லவபுரியான காஞ்சி மாநகரிலே ஒரு வீடு. வீட்டின் உள்ளேயும் வெளியேயும் குவிக்கப்பட்டிருக்கும் கற்களைப் பார்த்தாலே அது ஒரு சிற்பியின் வீடு என்பது தெரிகிறது. விதவிதமான மூர்த்தங்கள் - தெய்வச் சிலைகள் - வனிதையரின் எழிலை எடுப்பாகக் காட்டும் படைப்புக்கள். முற்றுப் பெற்றவை பல, முடிக்... லையும் ஒவ்வொரு பாவங்களை விளக்குவனவாக இருந்தன. ஆனா... லை. ஒருவித சோகமே குடி கொண்டிருக்கிறது. இத்தனை அழகி... ம்.

வினா எ...

1. சிற்பி... ன்ன?

சிதறி... ணீர் திரளச் சோகமே வடிவாக உட்கார்ந்திருக்கிறாள் ஒரு பெண். ... கர்ப்பிணியும் கூட. பொலியும் அழகு. ஆனால் கணவனின் பிரிவா... சம் ஏற்பட்டது. நாடே நசித்துப் போகும்படியாக வறட்சி கண்ட... னவியின் அவஸ்தையைக் காணச் சகியாத கலைஞன் - கணவ... வேற்றூர் போனான் வேலை தேடி. மாதங்கள் பலவாயின. தகவல் ஏதுமில்லை. அதுவே அவள் தவிப்புக்கு காரணம்.

2. கல் தச்சர்களை தஞ்சைக்கு ஏன் வரவழைத்தான், அவர்களிடம் கூறியதை விவரி? (அல்லது) தஞ்சைப் பெரிய கோயிலை உருவாக்கும் பொறுப்பு ஒப்படைக்க சோழர் கையாண்ட முறையை விவரி?

தரணி புகழும் தஞ்சையிலே சக்கரவர்த்தி ராஜராஜன், மகேசனுக்கு மகத்தானதோர் கோயில் எழுப்பத் திட்டமிட்டு, நாட்டிலுள்ள கல்தச்சர்களை எல்லாம் தஞ்சையில் வந்து கூடும்படி தண்டோராப் போட்டு அறிவித்திருந்தான். ராஜராஜன், தான் எழுப்ப எண்ணியுள்ள கற்றளியைப் பற்றிக் கூடிஇருந்த சிற்பிகளிடம் விவரித்தான். ‘‘இதுவரை எங்குமே காணாத முறையில், பார்த்தவர் பரவசப்படும் நிலையில், பரமனுக்குக் கோயில் எழுப்ப வேண்டும். உருவாக்கப் போகும் ஒப்பற்ற கோயிலின் மாதிரியை வடிவமைத்துக் காட்டுங்கள். யாருடைய மாதிரி, எனக்கு உவப்பாகப் படுகிறதோ, அவரையே தலைமை ஸ்தபதியாக்கி, தஞ்சைக் கோயிலை உருவாக்கும் பொறுப்பை ஒப்படைக்கிறேன்’’, என்றார் மன்னர் ராஜராஜர்.

3. கோயிலை எழுப்பும் பணி யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?

சோமவர்மன் என்று ஒருவன். கருத்த உடல், சிரித்த முகம். எடுப்பான தோற்றம் கொண்ட அவன் இணையில்லாத் திறமை மிக்கவன். மதுரை மீனாட்சியின் கோயிலை அழகுற அமைத்துப் புகழ் பெற்றவன். சொந்த ஊர் காஞ்சிமாநகரம் என்று கூறினார்கள். பல்லவ நாட்டின் தலைநகரைவிட்டு வந்து, பத்து ஆண்டுகள் ஆகின்றதாம். குடும்பத்தை மறந்து கோயில்களை உருவாக்குவதிலேயே நாட்களைக் கழித்து வருகிறான் சோமவர்மன். அவன் சமைத்த மாதிரி ‘தளியே’ மன்னர் ராஜ ராஜரின் மனதுக்கு உகந்ததாக இருந்தது. எனவே கோயிலை எழுப்பும் பணி சோமவர்மனிடமே ஒப்படைக்கப்பட்டது.

4. சோழத் தலைநகர் நோக்கி சிற்பிகள் சாரி வைக்கக் காரணம் என்ன?

‘கிணிங்’, ‘கிணிங்’ என்ற உளியோசை ஒலிக்கலாயிற்று. ஆயிரமாயிரம் சிற்பியர் இரும்பை நிகர்த்த கருங்கற்களில் உளிகொண்டு பேசிக் கொண்டிருந்தனர். மண் பரந்த தஞ்சையம்பதியில் கருங்கற்களை மலைமலையாக எங்கெங்கிருந்தெல்லாமோ கொண்டு வந்து குவித்திருந்தார் சோழ மன்னர். மெல்ல மெல்லத் தஞ்சையிலே பெரிய கோயில் உயர்ந்து கொண்டு வந்தது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சிற்பிகள் சோழத் தலைநகர் நோக்கி சாரி வைக்கலானார்கள்.

வினா எண் 3

1. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? இக்கருத்தை விளக்குக.

காஞ்சியிலே முன்பு பார்த்த வீட்டிலே, இன்று பன்னிரண்டு வயதுப் பாலகன், உளிகொண்டு புதிய சிற்பங்ளை உருவாக்கிக் கொண்டிருக்கிறான். முன்பு நாம் பார்த்த சிற்பங்களுக்கு இவன் வடிக்கும் சிற்பங்கள் எவ்வகையிலும் தாழ்ந்துவிடவில்லை. சொல்லப்போனால் அவற்றைவிட அழகும் கற்பனை வளமும் கூடித்தான் காணப்படுகின்றன. புலிக்குப் பிறந்தது பூனையாகிவிடுமா என்ன? சோமவர்மனின் மகனாயிற்றே.

2. பால சிற்பி, தஞ்சைக்கு வரக் காரணம் என்ன?

ஒருநாள் அன்னை கண்ணீர் விட்டழ, ‘‘நான் என் அப்பாவைத் தேடிக் கண்டு பிடித்துவரப் போகிறேன்’’ என்று கூறிக் கிளம்பிவிட்டான்.

3. சோழ நாட்டை அடைந்த பாலசிற்பியை வரவேற்றது யார்? அவளின் பேரப்பிள்ளைக் குறித்து எழுதுக.

பல மாதங்கள் பயணப்பட்டு சோழ வளநாட்டை வந்தடைந்தான் பால சிற்பி. ஒரு மூதாட்டியின் குடிசையை நோக்கிப் போனான். அவள் இவனைப் பரிவோடு வரவேற்றாள். அமுதூட்டி அன்பாகப் பேசினாள். வழி நடந்து வந்த சிரமம் தீர, உறங்கி ஓய்வு கொள்ளச் சொன்னாள். இளைஞனும் அப்படியே செய்தான். மதியத்துக்கு அந்த மூதாட்டியின் பேரப் பிள்ளை வந்தான். குலம் விளங்க வந்த அவனுக்குக்

குலசேகரன் என்று பெயர். கல்லுளியை நம்பி வாழும் கலைஞன் அவன் என்பதை அறிந்தபோது பால பல்லவ சிற்பிக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. ஒத்த வயதுடைய இருவரும் அளவளாவினர்.

4. தலைமைச் சிற்பியைப் பார்த்து பால சிற்பி வினவியதையும், அங்குள்ளோர் நிலையையும் எழுதுக.

இங்கும், அங்கும், எங்கும் சுற்றி அலைந்த பாலசிற்பி, முடிவாக அடித்தளமிட்டு மேலே எழுவதற்கு ஆயத்தமாகியுள்ள கோயில் பகுதிக்கு வந்தான். உற்றுப் பார்த்தான். பார்த்தவன் முகம் சாம்பியது. நெஞ்சம் துணுக்குற்றது. குலசேகரனிடம் ஓடினான். "அஸ்திவாரம் அமைத்துக் கொடுத்தது யார்? கோயிலை உருவாக்கும் பொறுப்பு எந்தச் சிற்பியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது" என்று வினவினான். சோமவர்மனிடம், "நீங்கள் வகுத்துள்ள தளத்தின்மீது கோபுரம் எழும்புமா? இதன்மீது கோபுரம் உயராமல் உட்கார்ந்து விடுமே. நன்கு சிந்தித்துதான் செயல்பட்டீர்களா?" என்று கேட்டான் தன் கையிலுள்ள கோலினால் கோபுர அடித்தளத்தைச் சுட்டிக் காட்டியபடி. குலசேகரனுக்கு நெஞ்சு தவித்தது. அங்கிருக்கும் அத்தனை சிற்பிகளுக்கும் தலைவரான சோமவர்மனிடமே இப்படிப் பேசுகிறானே, எங்கிருந்தோ வந்த பயல் என்று. தலைமை ஸ்தபதியும் திகைத்தார்.

<u>வினா எண் 4</u>

1. சோமவர்மனிடம் கேள்வி கேட்ட பாலசிற்பிக்கு தலைமைச் சிற்பி அளித்த பதில் யாது?

'முப்பது வருஷ அனுபவத்தில் எத்தனையோ கோயில்களை உருவாக்கி இருக்கிறோம். இதுவரை தவறு ஏற்பட்டதில்லை. சின்னப் பையன் ஏதோ சொல்லுகிறான்' என்று அதைப் பெரிதாக மதிக்காமல் முறுவலித்தபடி போய்விட்டார்.

2. இப்படி அவரிடம் கேட்டிருக்கக்கூடாது என்ற கேள்விக்கு பாலசிற்பியின் பதில் யாது?

"உண்மையை – அதில் உள்ள குறையைக் கண்டும் பேசாதிருக்க முடியவில்லை என்னால். பின்னால் அவருக்கே அது விளங்கிவிடும்" என்றான் பாலபல்லவ சிற்பி. குலசேகரனும் புதிய நண்பனின் துணிச்சலையும் திறமையையும் மனத்துக்குள் வியந்துக்கொண்டான்.

3. பாலசிற்பியின் கூற்று எவ்வாறு மெய்யானது?

ஒருநாள் அதிகாலையில் கோயில் தடத்துக்கு வேலைக்குப் போனவர்களுக்கு அதிர்ச்சி தரும் காட்சி காத்திருந்தது. முதல் நாள் மாலை மூன்றடுக்கு வரை எழும்பி இருந்த கோபுரம் அப்படியே சரிந்து தரை மட்டமாகிக் கிடந்தது. "பையன் சொன்னபடியே நடந்துவிட்டதே" என்ற வார்த்தைகள்தான் பார்த்தவரிடமிருந்து வெளிப்பட்டது.

4. இப்படியாகுமென்று பாலசிற்பிக்கு எவ்வாறு தெரிந்ததாகக் கூறினான்?

"என் தந்தை மகா சிற்பியாம். அவர் இரத்தத்தின் சத்து இந்தத் தத்துவத்தை எனக்கு அறியும் ஆற்றலை அளித்திருக்கிறது. நான் அவரை நினைத்து நானாகவே கற்றுக்கொண்ட இக்கல்வி பொய்க்கவில்லை" என்று பூரித்துப் போனான் பால பல்லவ சிற்பி.

<u>வினா எண் 5</u>

1. இரவோடு இரவாக பாலசிற்பி தஞ்சையை விட்டு போகக் காரணமாக இருந்த நிகழ்ச்சியை விவரி?

வெகு நேரம் நண்பர்கள் இருவரும் சிற்பம், சிலை பற்றி பேசிக்கொண்டிருந்தனர். பிறகு வழி நடந்த களைப்பு தீர படுக்கச் சென்றான் பல்லவ இளைஞன். உள்ளே அவனுக்காகக் குடிக்க வைத்திருந்த பால் பாத்திரம் தரையில் உருண்டு கிடந்தது. அருகே ஒரு பூனையும் வாயில் நுரை வழிய செத்துக் கிடந்தது. 'என் திறமையிலே பொறாமை கொண்டவர்கள் எனக்கு விஷமிட்டிருக்கிறார்கள். இனி ஒரு நிமிஷமும்

தஞ்சையிலே தங்கக் கூடாது' என்ற முடிவோடு, இரவோடு இரவாக அப்போதே அவ்விடத்தை விட்டுக் கிளம்பி விட்டான் பாலசிற்பி.

2. பாலசிற்பி தன் மகன்தான் என்பதை சோமவர்மர் எவ்வாறு அறிந்து கொண்டார்?

அவனைப் பற்றிய தகவல்களை, எந்த ஊர்க்காரன் என்பதை விசாரித்தார். மறைந்த பையன் பல்லவ நாட்டான் என்பதையும் அவன் தாயாரின் பெயரையும் கேட்டதும் சோமவர்மனுக்கு அந்த அற்புதப் பையன் தன் அருமை மகன்தான் என்பது விளங்கிவிட்டது. பார்த்ததுமே உள்ளத்தில் பாசம் பீறிட்டதையும் நினைத்துக் கொண்டார்.

3. புலியின் பிடியிலிருந்து சோமவர்மர் தன் மகனை எவ்வாறு மீட்டுக் கொண்டார்?

ஒரு மிருகம் - இரு மனிதர்கள். தான் பெற்ற கண்மணியை உடலால் மூடி மறைத்துக் கொண்டு அந்தக் கொடிய புலியின் கழுத்தை இறுகத் தழுவிக் கொண்டார். தழுவலா இது? இல்லை. ஜீவ மரணப் போராட்டம். சோமவர்மரும் புலியும் உருண்டார்கள், புரண்டார்கள், உறுமினார்கள்... மூச்சுத் திணறினார்கள். பல்லவ சிற்பியின் உடலெல்லாம் முள்ளும் புலி நகமும் கீறிக் கிழிக்க இரத்தம் பிரவாகமாக ஓடியது. ஆனாலும் அவர் புலியின் கழுத்தை இறுக்குவதைத் தவிர்க்கவில்லை. அதன் மூச்சடங்கி, நாக்கு வெளியில் தள்ளி, வாலின் ஆட்டம் அடங்கித் தணிந்த பிறகே, அதன் பட்டு உடலில் தானும் மயங்கி விழுந்தார்.

4. தஞ்சைக்கு திரும்பிய தந்தையும் தனையனும் கோயிலை எவ்வாறு மாற்றி அமைத்தனர்?

தந்தையும் தனயனும் தஞ்சைக்குத் திரும்புகின்றனர். சரிந்த கோபுரம் நிமிர வேண்டும்; விழுந்த கோபுரம் எழவேண்டும். அஸ்திவாரத்தை மாற்றிப் போடச் செய்கிறான் பாலகன். அதன்படியே மாற்றி அமைத்து மேலே அடுக்குகளைக் கூட்டிக்கொண்டு போகிறார்கள். கோபுரம் கம்பீரமாக நிமிருகிறது, உயருகிறது. நூற்றாண்டுகள் பல மறைந்தாலும் குலையாமல் நிலைத்து நிற்கும் ஆலயமாக அது ஓங்கி உயருகிறது. 'ஆலயமென்றால் அது பிரகதீஸ்வரர் ஆலயம்தான். கோயிலென்றால் அது தஞ்சைப் பெரிய கோயில்தான் என்று பாரோர் புகழ்ந்தனர்.

# மாடு மேய்த்த மாமன்னன்

வினா எண் 1

1. சந்திர குப்தர் மற்றும் அவரின் தந்தையின் வம்சத்தைக் குறித்து எழுதுக.

   புத்த பகவானின் சாக்கிய வமிசத்து சத்திரியர்களின் ஒரு கிளையில் வந்தவர். 'மோரி' என்ற சத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவராதலால் இவருக்கு 'மௌரியர்' என்ற பட்டப் பெயர் வந்தது.

2. சந்திர குப்தரின் தாயை பாடலிபுரத்துக்கு அழைத்து வந்தவர் யார்? அவர் கூறிய யோசனை யாது?

   அநாதையாகிவிட்ட சந்திர குப்தரின் தாயை அவரது மாமா பாடலிபுத்திரத்துக்கு அழைத்து வந்தார். அங்கு வந்த பிறகுதான் சந்திரகுப்தர் பிறந்தார். தான் வாழவே முடியாத நிலையில் குழந்தையை வளர்க்க முடியாமல் தவித்தாள் தாய். இதைக் கண்ட அவர் சகோதரர் "சகோதரி, உன் குழந்தையை வசதியாக வாழும் ஒரு தனவந்தரின் வீட்டில் கொண்டு போய் அவர்களுக்குத் தெரியாமல் வைத்துவிட்டு வந்துவிடு. இந்த அழகிய குழந்தையை யாரும் வளர்க்கத் தயங்க மாட்டார்கள். இதனால் குழந்தையும் நல்ல இடத்தில் பசியின்றி வளரும். உன் பாரமும் குறையும்" என்று யோசனை கூறினார்.

3. சந்திர குப்தர் யார், யாரால் வளர்க்கப்பட்டார்?

   சந்திர குப்தரின் அன்னை, தன் குழந்தையை ஒரு பசுமாட்டுக் கொட்டிலில் விட்டு விட்டு வந்தாள். பசுக்களின் சொந்தக்காரன் குழந்தையை மகிழ்ச்சியோடு வீட்டுக்கு கொண்டுபோய் வளர்க்கலானான். சற்றுப் பெரியவனானதும் அந்த இடையன், குழந்தை சந்திரகுப்தனை ஒரு வேடனுக்கு விற்றுவிட்டான்.

4. சந்திர குப்தரின் தனித்தன்மை எவ்வாறு வெளிப்பட்டது? அதைக் கண்ட சாணக்கியர் என்ன செய்தார்?

   கால்நடைகளை மேய்க்கும் தொழிலானாலும் அதிலும் சந்திரகுப்தன் தனித் தன்மையோடு விளங்கினான். ஊருக்கு வெளியே மற்ற பையன்களுடன் விளையாடும் போது இவன் மன்னனாகவும் மற்ற பையன்களைக் குடிப்படைகளாகவும் பாவித்துக் கொண்டு விளையாடுவார்கள். ராஜா விளையாட்டு! விளையாட்டுக்காக அரச வேஷம் ஏற்று, அரியணை என்று மண்மேட்டைச் சிங்காதனமாக எண்ணி அமர்ந்து சபை கூட்டி, குறை கேட்டு, நியாயம் வழங்கினான் மாடு மேய்த்த சிறுவன்.

வினா எண் 2

1. சந்திர குப்தரை தட்சசீலத்திற்கு அழைத்துச் சென்றது யார்? ஏன்?

   தட்சசீலத்தைச் சேர்ந்த வேதியரான விஷ்ணு குப்தர் சகல கலைகளிலும் விற்பன்னர். குழந்தைகளின் விளையாட்டைக் கண்டார். அவரது கூரிய பார்வை, மன்னனாக அமர்ந்து நீதி வழங்கும் சிறுவன் மீது பதிந்தது. அவனிடம் ஒளிந்துள்ள தகுதியையும், மேதைமையையும் உணர்ந்துக் கொண்டார். இந்தச் சிறுவனால் இந்த நாடு மகோன்னதமான நிலையை அடையப் போகிறது என்று தீர்க்கதரிசியான அவர், ஒரு தீர்மானத்துக்கு வந்தார். விளையாட்டு முடிந்ததும் சிறுவனை அழைத்து விசாரித்தார். பிறகு அவனுடன் வேடனிடம் சென்றார். அவனுக்கு அந்தக் காலத்து நாணயமான 'கார்ஷா'வில் ஆயிரம் கார்ஷாக்களை எண்ணிக் கொடுத்து, சந்திர குப்தனை விடுதலை விலைக்குக் கொண்டு சென்று தம்முடன் தட்சசீலத்துக்கு அழைத்துப் போனார்.

2. கிரேக்க மாவீரன் பாரதத்தின் மீது படையெடுக்க காரணம் என்ன? கிரேக்க மன்னனுக்கு சாதகமாக இருந்த சூழ்நிலையை விவரி?

கிரேக்க மாவீரன் அலெக்ஸாந்தர் பாரதத்தின்மீது படையெடுத்து வந்திருந்தான். வடமேற்குப் பகுதி சிறு சிறு ராஜ்யங்களாகச் சிதறுண்டு கிடந்தது. இந்திய அரசர்களுக்குள்ளே ஒற்றுமை இல்லை. பிளவு, பலவீனம் இரண்டும் கிரேக்க மன்னன் அலெக்ஸாந்தருக்குச் சாதகமாக ஆயின.

3. நவநந்தர்களைப் பற்றி விவரித்து எழுதுக.

மகத சாம்ராஜ்யத்தை அப்போது ஆண்டவன் மகா பத்மநந்தன். தந்தையைக் கொன்று சிங்காதனம் ஏறியவன். பெரிய வீரன். ஆனால் தனது தீய செயல்களினால் மக்களின் வெறுப்புக்கு ஆளாகியிருந்தான். இவனது புதல்வர்களோ எட்டுப் பேர். இவர்களையும் சேர்த்து நவநந்தர்கள் என்று அழைத்தார்கள் மக்கள். நவநந்தர்களின் கொடுங்கோல் ஆட்சியினால் குமுறிக்கொண்டு இருந்தார்கள் குடிமக்கள்.

4. சாணக்கியரும், சந்திர குப்தரும் அறிவும் ஆற்றலுமாக செயல்படக் காரணம் என்ன?

அலெக்சாந்தரிடம் இந்திய மன்னர்கள் அடைந்த தோல்வியைக்கண்டு, சந்திரகுப்தனின் நெஞ்சம் குமைந்தது. அதனால் வீரமும் துணிவும் கொண்ட அவர், அந்நியர்களை இந்த மண்ணிலிருந்து விரட்டியே தீருவேன் என்று சபதமெடுத்துக் கொண்டார். மாற்றானின் போர் முறைகளில் உள்ள சிறப்பில்புகளை உன்னிப்பாகக் கவனித்தார். தம்மிடையே உள்ள குறைபாடுகளையும் உணர்ந்தார். ஆசிரியர் சாணக்கியரும் மாணவன் சந்திர குப்தனும் அறிவும் ஆற்றலுமாகச் செயல்பட்டார்கள்.

<u>வினா எண் 3</u>

1. சாணக்கியரும் சந்திரகுப்தரும் சுற்றுப்பயணம் மேற்கொண்டது ஏன்? விவரி?

பாஞ்சால மக்களின் மனத்தில் சுதந்திர எழுச்சியை உருவாக்குவதற்காக, சாணக்கியரும் சந்திரகுப்தரும் நாடு முழுவதும் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்கள்.

2. பாரதத்தின் மேற்குப் பகுதியை சந்திரகுப்தர் எவ்வாறு மீட்டார்? விவரி?

பாஞ்சால மக்கள் வீரத்துக்குப் புகழ் பெற்றவர்கள். தக்க தலைவன் இல்லாமையால் உற்சாகம் குன்றி இருந்தனர். இப்போது வழிகாட்டியாக, அறிவாளி சாணக்கியரும் படைத்தலைவனாக வீரன் சந்திர குப்தனும் கிடைக்கவே பொங்கி எழுந்தார்கள். சந்திர குப்தன் தன் படையில் சேர்ந்த ஏராளமான வீரர்களுக்குப் புதிய முறையில் போர்க் கலையைப் பழக்கி வைத்தான். இதற்குள் அலெக்ஸாந்தர் மேற்கொண்டு தம் படையெடுப்பைத் தொடராமல் திரும்பிவிட்டார். ஆனால் அவர் வென்ற பகுதிகள்ல் கிரேக்கப் பிரதிநிதிகள் ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களையெல்லாம் போரில் வென்று மூன்றே ஆண்டுகளில் பாரத மண்ணில் யவனப் பூண்டே இல்லாமல் செய்து விட்டார் சந்திர குப்தர்.

3. மகத சாம்ராஜ்ஜியத்தை எவ்வாறு சந்திரகுப்தர் கைப்பற்றினார்? விவரி?

மகத தேசம் நவநந்தர்களின் கொடுங்கோல் ஆட்சியில் மக்கள் படும் துயரம் பற்றி அவருக்கு முன்பே தெரியும். பெரும் படை பலம் கொண்டவன் நந்த மன்னன். அவனை எதிர்ப்பதற்குப் போதுமான படை வலிமை பெற்றிருக்கவில்லை சந்திரகுப்தர். ஆனால் சாணக்கியரின் ராஜதந்திரமும் அவருடைய மனோவலிமையுமே நவநந்தர்களை எதிர்க்கும் துணிவைக் கொடுத்தன. எல்லாவற்றுக்கும் மேலாக மகத மன்னன் குடிமக்களின் வெறுப்பைப் பெற்றிருந்தான். சாணக்கியரின் ராஜ தந்திரம், நந்த மன்னரின் பெரிய அதிகாரிகளைச் சந்திர குப்தர் பக்கம் வரும்படி செய்தது. எண்ண மாளாத படைகொண்ட நவநந்தர்களைப் போரில் விரட்டியடித்து வெற்றிவாகை சூடினார்.

4. சாணக்கிய தந்திரம் என்றால் என்ன? விவரி?

நாடு சிறுசிறு ராஜ்யங்களாக இருப்பதனால் மன்னர்கள் தங்களுக்குள் சண்டையும் பூசலுமிட்டுக் கொண்டு, அந்நிய நாட்டான் உள்ளே வருவதற்கு வாய்ப்பு அளித்து விடுகிறார்கள். எல்லா அரசர்களையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வந்தால், போர் என்று வரும்போது, எல்லோரும் ஒருங்கிணைந்து எதிர்க்கலாம் என்பதே சாணக்கிய தந்திரம் ஆகும்.

5. சந்திர குப்தரின் சாம்ராஜ்யம் எங்கெங்கு பரவியிருந்தது?

சந்திர குப்தரின் சாம்ராஜ்யம் கிழக்கே வங்கத்திலிருந்து, மேற்கே இந்துகுஷ் மலை வரையிலும், வடக்கே இமயத்திலிருந்து தெற்கே நர்மதை நதி வரையிலும் விரிந்து பரந்து கிடந்தது.

6. எத்தனை ஆண்டுகள் சந்திரகுப்தர் ஆட்சிபுரிந்தார்? தாம் ஆண்டப்பகுதியை எவ்வாறு நிர்வகித்தார்? விவரி?

பெரிய அதிகாரங்கள் மன்னரின் நேரடி பார்வையில் இருந்தது. ஆட்சியைக் கவனிக்க அமைச்சர் குழு இருந்தன. மத்திய ஆட்சி பதினெட்டு இலாக்காக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ராஜப் பிரதிநிதிகள் அப்பகுதிகளை ஆட்சி புரிந்தனர். கிராமங்களை நிர்வகிக்கக் குழுக்கள் இருந்தன. அரசியல் சாஸ்திரம் எழுதிய சாணக்கியரின் சீடரான சந்திரகுப்தரின் ஆட்சி, எல்லா வகையிலும் மேம்பட்டிருந்தது. இருபத்து நான்கு ஆண்டுகள் மிகத் திறமையுடன் ஆட்சி புரிந்தார்.

# மஹா ராணா பிரதாப்

வினா எண் 1

1. உதயசிம்மன் - குறிப்பு வரைக.

உதயசிம்மன் ஓர் உதவாக்கரை. நாட்டு மக்களின் வெறுப்புக்கும் வேதனைக்கும் உரியவனாக விளங்கினான். சுக வாழ்விலும் கேளிக்கைகளிலுமே மூழ்கிக் கிடந்தான் உதயன். இருபது திருமணங்கள் வரை செய்துகொண்டான். அவன் ஆட்சியில் நாட்டின் பல பகுதிகள் மொகலாயர் வசமாயின. மக்கள் மனம் புழுங்கினர். கோழையான மன்னரின் ஆளுகையிலே மகிமை இழந்து நின்றது மேவார்.

2. வாளின் கூர்மையை உதயசிம்மன் எவ்வாறு பரீட்சித்தார்? (அல்லது) சக்திசிங்கின் தலையை வெட்ட உத்தரவிட்டது ஏன்?

மேவாரின் அரசவை கூடியிருந்தது. ஓர் அழகிய வாள் மன்னரின் சமூகத்துக்கு வந்தது. உதயசிம்மர் அதன் கூர்மையைப் பரீட்சிக்க எண்ணினார். ஒரு நூல் கட்டித் தொங்கவிடப்பட்டது. "இதன் மீது இந்த வாளை வீசு" என்றார் மன்னர் ஒரு வீரனிடம். அப்போது ஐந்து வயதே நிரம்பிய பிரதாபின் தம்பி சக்தி சிங் அங்கிருந்தான். வாளின் கூர்மையைச் சோதிக்கத் தந்தை கையாண்ட முறை அந்தச் சிறுவனுக்கக் கேலிக்கிடமாகப் பட்டது. "வாளின் கூர்மையைப் பரீட்சிக்க நூல் கண்டையா பயன்படுத்துவது? இப்படிக் கொடுங்கள் அதை" என்று கூறினான் சக்தி சிங். வாள் அவனிடம் கொடுக்கப்பட்டது. சட்டென்று தன் விரலை அதனால் வெட்டினான். இரத்தம் கொட்டியது. ஆனால் சிறுவனின் வாயோ "நல்ல கத்திதான்" என்ற பாராட்டைக் கூறியது.

3. சக்திசிங் சாலும்பரா அரசரிடம் செல்லக் காரணம் என்ன?

சாலும்பரா என்னும் நாட்டு அரசருக்குக் குழந்தைகள் கிடையாது. மேவார் மன்னருக்குப் பல தடவைகளில் பல விதங்களில் உதவியிருக்கிறார் அவர். இந்த வேளையில அவரும் அவையில் இருந்தார். 'மன்னவா, நீங்கள் பல தடவைகளில் என் சேவையைப் பாராட்டிப் பரிசு தர விரும்பினீர்கள். ஆனால் அப்போதெல்லாம் நான் தங்களிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டேன், இல்லையா? அதை நினைவில கொண்டு இன்று இச்சிறுவனை எனக்குத் தானமாகத் தாருங்கள்" என்று கேட்டுக் கொண்டார். உதயசிம்மரும் தம் மகன் சக்தி சிங்கை பாலும்பராவின் அதிபருக்குத் தானமாக அளித்துவிட்டார்.

4. பிரதாப் தன் சகோதரனை ஏன் தன்னிடமே தருவித்துக் கொண்டான்?

ஆண்டுகள் பல கடந்தன. சாலும்பரா அதிபருக்குச் சொந்த மகனே பிறந்துவிட்டான். வாரிசு விஷயத்தில் சக்திசிங் இப்போது அவருக்குப் பாரமாக இருந்தான். இப்போது பிரதாப் ராணாவாகி விட்டார். அன்று அவையில் தன் தம்பியின் செயலையும் அதனால் அவன் அந்நியனுக்கு மகனாகப் போனதையும் அவர் மறக்கவேயில்லை. "ராணா பிரதாபிடம் அவருடைய தம்பியை அனுப்பி வையுங்கள்" என்று தமது தூதனை சாலும்பரா அதிபருக்கு ஆளனுப்பி, தம் சகோதரனைத் தருவித்துக் கொண்டார்.

வினா எண் - 2

1. பிரதாப் சக்திசிங்கை நாடு கடத்தக் காரணம் என்ன?

வசந்த காலத்தில் அஹரியா என்று ஒரு விழா. அப்போது ராணா பிரதாப்பும் சக்தி சிங்கும் வேட்டையாடச் சென்றனர். ஒரு பாட்டுப் பன்றியை இருவரின் அம்புகளும் கொன்றன. பன்றியைக் கொன்றது யார் என்பதில் வாக்குவாதம் எழுந்தது. வாய் சண்டை வாள் சண்டையாக மாறியது. இருவரது வாள்களும் உறையினின்று வெளிப்பட்டு விட்டன. நிலைமை மோசமாவதைக் கண்ட அங்கிருந்த ஒரு

ராஜகுரு இருவரையும் சமாதானப்படுக்கினார். எத்தனையோ சொன்னார். அத்தனையும் வீணாயின. “உறையிலிருந்து வெளிப்பட்ட வாள், உணவருந்தாமல் மறுபடி அதனுள் முடங்காது'' என்றான் சக்தி சிங். வாளோடு வாள் மோதியது. சட்டென்று இடையிலே புகுந்து விட்டார் ராஜகுரு. அவரது குரதி குடித்த பிறகு, பெரியவரின் தியாகத்துக்குப் பிறகு, ராஜகுமாரர்களின்வெறி அடங்கியது.

ராணா பிரதாப், “இப் பெரியவரின் மரணத்துக்கு நீயே காரணம். இக்கொலைக் குற்றத்துக்காக உனக்கு மரண தண்டனை தர வேண்டும். ஆனால் உன்னை மன்னிக்கிறேன். இனி நீ மேவாரில் இருக்கக் கூடாது. மேவாரின் எல்லையை விட்டே போய்விடு... போ!'' என்று கர்ஜித்தார்.

2. பிரதாப்பின் சொல் கேட்ட சக்திசிங்கின் பதில் யாது? எங்கு சென்றான்?

“இந்த மன்னிப்பு மிகவும் கசப்பான மன்னிப்பு, பிரதாப். ஆனதல் இதே மன்னிப்பை நான் உனக்கு ஒரு நாள் திருப்பித் தருவேன், அப்போது நீ – துணை இழந்து துன்பத்தில உழன்று கொண்டிருப்பாய்'' என்று கூறியபடியே அவ்விடத்தை விட்டு அகன்ற சக்திசிங், மொகலாய மன்னன் அக்பரின் அவையை நோக்கிச் சென்றான்.

3. உரிமைக்கு முன்னுரிமை கொடுத்து பிரதாப் சித்தூரை மீட்கும்வரை எவற்றையெல்லாம் வெறுத்து ஒதுக்கினார்? எவ்வாறு வாழ்ந்தார்?

“இழந்த சித்தூரை மறுபடி மீட்பேன்'' என்று சபதம் செய்து கொண்டார் பிரதாப். “சித்தூர் சுதந்திரம் அடையும் வரை நான் பொன், வெள்ளிப் பாத்திரங்களில் உணவருந்த மாட்டேன். பட்டும் பஞ்சுமான மெத்தைகளில் தூங்க மாட்டேன். ஆடம்பரமான அரண்மனையில் வாழ மாட்டேன். விழாவோ கேளிக்கைகளோ கொண்டாட மாட்டேன். என் மீசையை முறுக்கிக் கொள்ளவும் மாட்டேன்'' என்று பிரதிக்கினை எடுத்துக் கொண்டார் பிரதாப். அதன்படியே மேவார் நாட்டின் மலைகளையே கோட்டையாகவும் அதில் உள்ள குகைகளையே துண்டு மனையாகவும் நினைத்து வாழ்ந்து வந்தார். காட்டில் உள்ள இலைகள்தான் அவரது உண்கலன்கள். கற்பாறைகளே தலையணைகள். சந்திரனே விளக்கு. ஆகாயமே கூரை என்று உரிமைக்கு முன்னுரிமை கொடுத்து வாழ்ந்து வந்தார்.

4. அந்நியர் பகையோடு தன் இனத்தவர் பகையும் சேரக் காரணம் என்ன?

ராஜபுதன நாடுகளில் மேவார் தவிர மற்றெல்லாம் மொகலாயருடன் நட்புக் கொண்டாடின. பிரதாபனோ குலப் பெருமை கொண்ட கோமான். குலத்தை விற்று வாழ்வு பெறுவதை வெறுத்தார். மொகலாயருடன் கொள்வினை கொடுப்பினை உடைய ராஜபுத்திரர்களைத் துரும்பென மதித்த ஒதுக்கினார். அவர்களுடன் சேர்ந்து உண்ணுவதைக் கூட விரும்பவில்லை அவர். அத்தனைக்கு இனப் பற்றும் மதப்பற்றும் கொண்டிருந்தார் மகாராணா பிரதாப். இதனால் பிரதாபருக்கு, தம் இனத்தவர்களின் பகைமையும் சேர்ந்து கொண்டது.

வினா எண் - 3

1. ராஜா மான்சிங் என்பவன் யார்? அவர் பிரதாப்பிடம் கூறியதையும், பிரதாப்பின் பதிலையும் எழுதுக.

ஒரு சமயம் ஷோலாப்பூர் போரில் வெற்றி கண்டது மொகலாயப் பெரும் படை. அதன் படைத் தலைமை தாங்கியவர் ராஜா மான்சிங் என்ற ராஜபுத்திரர். ஜோத்பூரின் அதிபர். பிரதாபுடன் நீண்ட நேரம் பேசினார் மான்சிங். “நீங்கள் நினைப்பதுபோல் அக்பர் ஒரு தீவிர முஸ்லீமே அல்லர். தமது திருமணத்தை இந்துக்கள் முறையிலேயே நடத்திக் கொண்டிருக்கிறார். ஜஸியா வரியை ரத்து செய்து விட்டார். பசு வதையைத் தடுக்க முயற்சித்து வருகிறார். தமது அரசவையிலே பல இந்து அறிஞர்களைப் பெரிய பதவிகளில் வைத்துக் கொண்டிருக்கிறார். இந்துவாகவே மாறிக் கொண்டிருக்கும் அவருடன் நீங்கள் பகை

பாராட்டுவது முறையல்ல. இதனால் பலன் ஏதுமில்லை. வீணாக நம்மை நாமே அழித்துக் கொள்ளுவானேன்?'' என்றார் மான்சிங்.

“நம்முடைய புராதனமான குலப் பெருமையையும் தர்மத்தையும் அழித்துக் கொண்டு வாழ்வு பெறுவதை நான் விரும்பவில்லை. என்முடிவிலிருந்து நான் மாறவே மாட்டேன்'' என்றார் பிரதாப்.

2. விருந்தாளியாக வந்த மான்சிங் எவ்வாறு நடத்தப்பட்டார்? பிரதாபனிடமிருந்து வந்த செய்தியையும் மான்சிங்கின் பதிலையும் எழுதுக.

விருந்தாளியாக வந்த மான்சிங்கை மறுநாள் பிரதாப்பின் மகன் அமர்சிங்தான் வரவேற்றான். ராணா பிரதாப்பைக் காணாத மான்சிங் முகம் சிவந்தது.

“என்னுடன் உணவருந்த மகாராணா வரவில்லையா?”என்று கேட்டார் ராஜா மான்சிங்.

“மன்னருக்குத் தலைவலி என்றும் அதனால் வர இயலவில்லை'' என்றான் பிரதாபின் குமாரன் அமர்.

“உன் தந்தையின் மானத்துக்காக நான் என் மானத்தையே முழுதும் விட்டுக்கொடுத்து இங்கு வந்தேன். அவர் என்னை மதிக்கவில்லை. இதன் விளைவு...? பிரதாப்! இன்று நீ என்னை அவமானப்படுத்தியது போல நான் உன்னை அவமானப்படுத்தாவிடில் என் பெயர் மான்சிங் அல்ல'' என்று வெளியேறினார் ராஜா மான்சிங்.

3. அக்பர் வெகுண்டெழக் காரணம் யாது? என்ன செய்தார்?

தன் சேனாபதி மான்சிங்குக்கு நேர்ந்த அவமானமும் சகோதரன் சக்திசிங்கை நாடு கடத்தியதும் அக்பரை வெகுண்டெழச் செய்தன. தன் மகன் சலீமின் தலைமையில் பெரும் படையை மேவாரின் மீது போர் தொடுக்க அனுப்பினார். ராஜா மான்சிங்கும் அவர் படையுடன் உதவிக்கு அனுப்பப்பட்டார். எண்பதாயிரம் வீரர் கொண்ட மொகலாயப் பெரும்படை மேவாரை நோக்கிக் கிளம்பியது.

4. பிரதாப் தன் மக்களுக்கு அனுப்பி கேட்டுக் கொண்ட செய்தி யாது?

ராஜபுதன வேந்தர் எவரும் இவர் பக்கமில்லை. தம் மக்களுக்குச் செய்தி அனுப்பிக் கேட்டுக் கொண்டார் பிரதாப். “யாரும் சமவெளியில் வசிக்காதீர்கள். மலைப் பிரதேசங்களில் சென்று குடியேறுங்கள். அந்நியன் கையில் எவரும் சிக்கிவிடக் கூடாது'' என்று பிரதாப் தன் மக்களுக்கு செய்தி அனுப்பிக் கேட்டுக் கொண்டார்.

வினா எண் - 4

1. மேவார் வீரர்கள் சூரத் துறைமுகத்தை சூறையாடக் காரணம் என்ன?

மொகலாயப் பேரரசுக்கு ஆடம்பரப் பொருள்கள் ஐரோப்பாவிலிருந்து வரும். சூரத் துறைமுகத்தில் வந்து இறங்கும் அவற்றை, மேவார் ராஜ்யத்தின் வழியாகத்தான் தில்லிக்குக் கொண்டு செல்லுவார்கள். சமாதான நாட்களில் அது சரி. ஆனால் விரோதம் ஏற்பட்ட பிறகு அப்படி நடக்கவிடுவார்களா? சூரத் துறைமுகத்திரலிருந்து சென்ற பொருள்களைச் சூறையாடினர் மேவார் வீரர்கள்.

2. போர்க்களத்தில் சலீம் கலங்கக் காரணம் என்ன?

அக்பரின் சேனை மேவார் நாட்டில் புகுந்தது. சமவெளிகள் வெறிச்சோடிக் கிடந்தன. மனித நாடமாட்டமே இல்லை. பயிர் பச்சைகளும் நாசமாக்கப்பட்டிருந்தன. சமவெளியைத் தாண்டி மலைப்பிரதேசத்துகுள் நுழைந்தது மொகலாயப் படை வெள்ளம். எங்கும் அடர்ந்த காடுகள், மேகத்தைத் தொடும் மலை முகடுகள், கிடுகிடு பள்ளத்தாக்குகள். மொகலாயப் படை இப்பிரதேசத்துக்குள் முழுமையாக வருவதற்காக் காத்திருந்தனர் மேவார் வீரர். குன்றுகளின் சரிவிலே ஒளிந்து நின்றார்கள். பாறைகளை உருட்டி வைத்துக்கொண்டு, மலை உச்சியிலே மறைந்திருந்தனர். மேவார் வீரர்கள். வில்லும்

அம்பும் தாங்கி காத்திருந்தனர். போர்முனையின் நீளமோ எண்பது மைல். பரந்து கிடந்த கானகத்தின் 'கம்' மென்ற மௌனத்தையும் நெடிது உயர்ந்து நின்ற குன்றுகளையும் கண்டு கலங்கினான் ஸலீம்.

3. அந்நியனுக்கு உதவ வந்த தன் இனத்தவனைக் கண்ட பிரதாபனின் நிலையையும், போர் குறித்தும் எழுதுக.

உடன் பிறந்தே கொல்லும் நோயைப் போல அந்நியனுக்கு உதவ வந்த தன் இனத்தானைக் கண்டதும் பிரதாபரின இரத்தம் கொதித்தது. வாளை உருவினர். அன்னை பவானியின் நாமத்தைக் கூறியபடியே போர்க்களத்தில் குதித்தார். வேல்கள் மின்னின. வாள்கள் உராய்ந்தன. ஈட்டிகள் பறந்தன. குதிரைகள் கனைத்தன. வீரர் சிங்கநாதம் செய்தனர். கல் சுவர் போலப் பள்ளத்தாக்கில் பிறர் நுழைய முடியாமல் நின்ற மேவார் வீரரைத் துளைக்க முடியவில்லை மொகலாயரால். எண்ணற்ற வீரர்கள் இரு பக்கத்திலும் வெட்டுண்டு சரிந்தனர். எங்கும் பிணக்காடு. இரத்த வெள்ளம். மான்சிங்கின் உடலெங்கும் காயங்கள்.

4. போரில் சலீம் எவ்வாறு உயிர் பிழைத்தான்?

மொகலாய இளவரசன் யானைமீது அமர்ந்து படைகளை நடத்திக் கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்து ஏராளமான போர் வீரர்கள். பிரதாபன் புயல்போல ஸலீமை நோக்கிப் பாய்ந்தான். இளவரசனைக் காத்து நின்ற வீரர்களை வெட்டிக் குவித்தான். சேதக் என்ற தனது அற்புதமான குதிரையைத் தட்டிக் கொடுத்தான் மேவார் வீரன் பிரதாப். சேதக் கம்பீரமாகக் கனைத்தது. அடுத்த விநாடி அதன் முன்னங் கால்கள் இரண்டும் ஸலீம் அமர்ந்திருந்த பட்டத்து யானையின் முன்னங்கால்களில் பதிந்தன. தன் எஜமானனை எதிரியின் அருகே உயர்த்திக் கொடுக்க அப்படிச் செய்தது அந்த அற்புதக் குதிரை. ராணா பிரதாப் தமது ஈட்டியை எடுத்து மொகலாய இளவரசனுக்குக் குறிவைத்து வீசினார். ஆனால் ஸலீம் சட்டென்று தன் தலையை அம்பாரிக்குள் இழுத்துக் கொள்ளவே, மயிரிழையில் உயிர் தப்பினான். வீசிய வேல் கம்பு அம்பாரியின் முடியைத் தகர்த்துக் கொண்டு போயிற்று. உயிர் பிழைத்ததை எண்ணி மகிழ்ந்தான் ஸலீம்.

வினா எண் - 5

1. மனோ வலிமை தலைதூக்கிய பிரதாபனின் உடல் வலிவு குன்றக் காரணம் என்ன?

வாள் வீச்சிலே மூன்றும், ஈட்டியினால் மூன்றும், துப்பாக்கிக் குண்டினால் ஒன்றுமாக உடலில் ஏழு காயங்கள். அவற்றிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. உடல் வலிவு குன்றிக் கொண்டே வந்தாலும் மனோவலி தலை தூக்கி நின்றது. வாள் வலிமையோ சொன்னபடி கேட்டது. ஆனாலும் எத்தனை நேரம்தான் உடல் வலியை அசட்டை செய்ய முடியும்? உடல் வலிவு குன்றிக்கொண்டே வந்தது.

2. ராஜபுத்திரர்களின் போர் முறையில் உள்ள சூட்சுமம் யாது?

ராஜபுத்திரர்களின் போர் முறையில் ஒரு சூட்சுமம். மன்னர் இருக்குமிடத்தை எங்கிருந்தும் அறியலாம். வெண் கொற்றக் கொடி, சாமரம் முதலிய விருதுகள் போர் முனையிலும் மன்னரின் உடன் இருக்கும். இவை இருக்கும் இடமே தலைவன் உள்ள இடம் என்பதை இருதரப்பு வீரரும், ஊகித்து உணருவார்கள். இதில் சாதகமும் உண்டு. பாதகமும் உண்டு.

3. ''மன்னனைக் காக்க தன்னுயிர் ஈந்தவன் மானவர்மன்'' என்பதை விளக்கி எழுதுக.

பிரதாபன் இருக்கும் இடத்தைக் கொடியும் குடையும் அறிவித்துக் கொண்டிருந்தன. எண்ணற்ற காயங்கள் பட்டும் சளைக்காமல் வாள் வீசிக் கொண்டிருக்கும் தங்கள் தலைவனைச் சூழ்ந்து கொண்டு, வதைக்க முற்படுகின்றனர் முகலாயர் என்பதை உணர்ந்துக்கொண்டான் - பிரதாபனுடைய

பாளையக்காரரில் ஒருவனான மானவர்மன். சட்டென்று செயல்பட்டான் மன்னனது கொடியையும் குடையையும் தனக்குப் பிடிக்குமாறு பணியாளரிடம் கூறினான். மானவர்மன் மனது மதிவன்மை கண்ட காவலர் அப்படியே செய்தனர். அந்த அரசச் சின்னங்களுடன், மானவர்மன் பிரதாபனிடமிருந்து மெல்ல வேறு பக்கம் நகர்ந்தான். கொடியும் குடையும் உள்ள இடமே மேவார் மன்னர் உள்ள இடம் என்று கருதிய மொகலாயப் படை வெள்ளம், மானவர்மனைப் பின்பற்றிச் சென்றது. உண்மையான பிரதாபனைச் சூழ்ந்து நின்ற பகைப் படையின் இறுக்கம் குறைந்தது.

வெகுதூரமாக ஓடிய வீரரை இழுத்துச் சென்ற மானவர்மன், பகைவருடன் போரிட்டபடியே மாண்டான். மன்னனைக் காக்கத் தன்னுயிரை ஈந்த மானவர்மனின் புகழ் மகத்தானது.

4. யுத்த தந்திரங்களுள் ஒன்றான பின்வாங்குதலை மேற்கொள்ள முடிவு செய்தது ஏன்?

யுத்த தந்திரங்களுள் ஒன்றான பின்வாங்குதலை மேற்கொள்ள முடிவு செய்து, படைகளுக்கு அதை அறிவித்துவிட்டு, அவர் மட்டும் தன்னந் தனியாக யுத்த களத்திலிருந்து வெளியேறித் தப்ப வேண்டும் என்று மன்னரைக் கேட்டுக் கொண்டார்கள் மேவார்ப் படைத் தளகர்த்தர்கள். அபாயத்திலிருந்து மன்னரைப் பிரித்துப் பாதுகாக்கவே இந்த ஏற்பாடு. பிரதாப் அதை விரும்பாவிடினும் அவர்களின் வற்புறுத்தலின் பேரில் ஒப்புக் கொண்டார். காயங்களினால் ஏற்பட்ட இரத்தப் போக்கும் மன்னரை வெகுவாகப் பாதித்திருந்தது.

வினா எண் - 6

1. சேதக் என்ற குதிரையின் அற்புதங்களை விவரித்து எழுதுக.

சேதக் என்ற தனது அற்புதமான குதிரையைத் தட்டிக் கொடுத்தான் மேவார் வீரன் பிரதாப். சேதக் கம்பீரமாகக் கனைத்தது. அடுத்த விநாடி அதன் முன்னங் கால்கள் இரண்டும் ஸலீம் அமர்ந்திருந்த பட்டத்து யானையின் முன்னங்கால்களில் பதிந்தன. தன் எஜமானனை எதிரியின் அருகே உயர்த்திக் கொடுக்க அப்படிச் செய்தது அந்த அற்புதக் குதிரை.

ஹல்தீகாடியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள, பலீசா கிராமத்தின் அருகே போகும்போது, ஓர் ஓடை குறுக்கிட்டது. அதிலோ பெருவெள்ளம். சற்றுத் தொலைவில் ஒரு குன்று. சட்டென்று தன் குதிரையைத் தட்டிக்கொடுத்து விரட்டினார் ராணா. குறிப்பறிந்துக் கொண்ட சேதக், குபீரென்று பாய்ந்தது, அந்தக் குன்றின் மீதேறி ஓடையின் எதிர்க் கரையில் உள்ள இன்னொரு பாறையை நோக்கித் தாவியது. ஓடையை ஒரே தாவலில் தாண்டி மறுகரை சேர்ந்த அந்த அற்புதக் குதிரை. தன் தலைவன் பத்திரமாக மறுகரைக்கு வந்துவிட்டதைத் தலை நிமிர்ந்து பார்த்தது. அடுத்த கணம் தரையில் விழுந்தது. அந்தத் தியாக ஜீவனின் உயிர் பிரிந்தது.

2. சகோதர பாசத்தால், சக்திசிங் செய்த செயலை விளக்கி எழுதுக.

பிரதாப் காயங்களுடன் தனியே தப்பிச் செல்வதையும் அவனை மொகலாய வீரர்கள் பின்தொடர்ந்து போவதையும் கண்ட சக்தி சிங்கின் உடல் - நிலை கொள்ளவில்லை. இப்போது அவனுக்கு ஆபத்து என்பதைக் கண்டதும் அவன் சதை ஆடியது. சகோதர பாசம் மேலோங்கியது. தன் குதிரையில் ஆறிப் பிரதாபனைத் துரத்திச் செல்லும் மூவரோடு, நான்காமவனாக இவனும் சேர்ந்து கொண்டான். ஆனால் சக்திசிங்கின் உள்ளத்திலே இப்போது விரோத பாவமில்லை. சகோதர பாசமே நிறைந்திருப்பதை மொகலாய இளவரசன் எப்படி அறிவான்.

பிரதாபனின் வீரத்தையும் தீரத்தையும் எண்ணிய நிலையில் ஆனந்தக் கண்ணீர் அவன் பார்வையை மறைத்தது. சகோதரர்கள் இருவரும் கட்டித் தழுவிக் கொண்டனர். கண்ணீரால் தோள்கள் நனைந்தன. “சீக்கிரம் என் குதிரையில் ஏறி விரைந்து செல்லுங்கள்” என்று துரிதப்படுத்தினான் சக்தி சிங். இதுவே சகோதர பாசத்தால் சக்திசிங் செய்த செயல் ஆகும்.

3. சுத்த வீரம் இல்லாதவரோடு நட்புக் கொள்ள விரும்பவில்லை – யார் கூற்று? விவரி?

பிரதாபனை விரட்டிச் சென்ற மொகலாய வீரரும் ராஜபுத்திரனான சக்தி சிங்கும் வெற்றியோடு வருவதை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தான் ஸலீம். “சக்தி, உன் குதிரையும் மற்றவர்களும் எங்கே? பிரதாப சிம்மன் என்ன ஆனான்?” என்று கேட்டான்.

“என் குதிரையைப் பிரதாபனுக்குக் கொடுத்து அவனைக் காப்பாற்றி அனுப்பினேன். அவனைத் துரத்திச் சென்றவர்கள் என் வாழுக்கு இரையாயினர்” என்றான் மேவார் இளவரசன் தலை நிமிர்ந்து.

தன் பக்கத்திலிருந்து கொண்டே தனக்கு எதிரான செயலை செய்து வந்திருக்கும் சக்தி சிங்கைத் துரோகியாக எண்ணி வெறுப்போடு பார்த்தான்.

“தனியே செல்லும் ஒருவன்மீது நான்கு வீரர்களை ஏவித் தாக்கச் சொல்வதை வீரமாகக் கருதவில்லை நான். தவிர, பிரதாபனோடு நான் விரோதம் பூண்டிருந்தாலும் அவன் என் சகோதரனல்லவா? என் உணர்ச்சிகளை உனக்குப் புரிய வைக்க முடியாது. சுத்த வீரம் இல்லாதவரோடு நட்புக் கொள்வதையும் நான் விரும்பவில்லை” என்று கூறித் தன் படை வீரருடன் மொகலாயரிடமிருந்து பிரிந்து சென்றான் சக்திசிங்.

4. மன்னர் பிரதாப் மலை, காடு போன்ற பல இடங்களில் மறைந்து தாக்குதல் நடந்த வேண்டிய காரணத்தை விவரித்து எழுதுக.

கும்பமேடு என்னும் கோட்டையிலிந்து போர் செய்தார் பிரதாப். கோட்டையைச் சூழ்ந்துகொண்டு முற்றுகையிட்டது அக்பர் படை. ஆனால் கோட்டை விழவில்லை. உளவாளிகள் கோட்டையின் உள்ளிருந்த குடிநீருக்கு விஷமிட்டுவிட்டனர். வேறு வழி இல்லாமல் அங்கிருந்து வேறொரு கோட்டைக்குப் போகும்படியாயிற்று. அதைத் தனது பீரங்கிகளால் தகர்த்துத் தரை மட்டமாக்கினான் ஸலீம். பிரதாபன் தம் படையுடன் தப்பி ஓடலானார். இதனிடையிலே வன்மங்கொண்ட ராஜா மான்சிங்கோ, மேவாரின் நகரங்களை ஒவ்வொன்றாகத் தம் வசமாக்கிக் கொண்டு வந்தார். மொகலாயரின் படை வெள்ளம் பல பகுதிகளாகப் பிரிந்து மேவார் நாட்டின் எல்லாப் பகுதிகளையும் நாசமாக்கிக் கொண்டிருந்தன. தலைநகரான உதயபுரி முற்றுகைக்கு உட்பட்டிருந்தது. மன்னரோ மலைகளிலும் காடுகளிலும் - மாற்றான் கையில் சிக்காமல் மறைந்திருந்து திடீர்த் தாக்குதல்கள் நடத்திக் கொண்டிருந்தார்.

வினா எண் - 7

1. ஒரே நாளில் ராணா பிரதாப் எத்தனை முறை இடம் பெயர்ந்தார்? ஏன் என்பதை விவரி?

ஒரு தடவை மரத்தடியிலே மனைவி மக்களுடன் தங்கி இருந்தார் பிரதாப். உணவருந்தப் போகும் சமயம் மொகலாயர் துரத்தி வரும் செய்தி கேட்டு உடனே குடும்பத்துடன் வேறு இடத்துக்குப் போனார். அங்கு இலையில் இட்ட ஆகாரத்தை ஒரு கவளம் எடுத்து வாயில் போடப் போகும்போது மறுபடி விரோதிகளின் வருகை. கையை உதறிவிட்டு அங்கிருந்து கிளம்பினார்கள். புதிய இடத்தில் மறுபடி சமையல் செய்து உண்ணப்போகும் போது திரும்பவும் அதே நிலை. இப்படி ஒரு நாளில், கைச் சோற்றை வாயிலிட முடியாமல் ஐந்து முறை இடம் மாறி மாறி ஓட வேண்டிய நிலை ஏற்பட்டதுதான் பரிதாபம்.

2. ராணா மகள் அழுதுக் கொண்டே ராணாவிடம் கூறிய செய்தியை விவரி? ராணாவின் உள்ளம் சுக்குநூறாக உடையக் காரணம் என்ன?

“அப்பா, ஒரு பாதி அடையை மாலைப் போதுக்காக மறைத்து வைத்திருந்தேன். அதைக் காட்டுப் பூனை ஒன்று கவ்விக் கொண்டு போய்விட்டதே, என் பசிக்கு இனி நான் என்ன செய்வேன்?” என்று விம்மலிடையே சொன்னது குழந்தை.

மைந்தரும், தோழரும், உற்றாரும் பல போர்களிலே வெட்டுண்டு மாண்ட போதோ, நாடு நகரங்களையும், அரண்மனை வாழ்வையும் இழந்து, கானகத்திலே விரோதிகளால் விரட்டி விரட்டி

வேட்டையாடப்பட்ட போதோ, மனமுடையாத பிரதாப்பின் உள்ளம் அன்று குழந்தை “அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வேன் அப்பா?” என்று அழுதபோது சுக்குநூறாக உடைந்தது.

3. மகளின் கூற்றைக் கேட்ட ராணாபிரதாப் விரக்தியில் வாடக் காரணம் என்ன?

“மேவார் மக்களும் இப்படித்தானே பசியால் துடிப்பார்கள்? அவர்களைக் காக்க வேண்டிய அரசனான நான் யுத்தம் யுத்தம் என்று காலமெல்லாம், காடு மலைகளில் ஓடி ஒளிந்து போராடிக் கொண்டிருக்கிறேன். பகைவர்களுக்குப் பயன்பட்டு, அவர்கள் பலம் பெற்றுவிடக் கூடாது என்று பயிர்களை எரித்துவிடுமாறும் வயல்களை அழித்து விடுமாறும் ஆணை பிறப்பித்திருக்கிறேன். என் குழந்தையைப் போலத்தானே அவர்களுடைய குழந்தைகளும் பசியால் வாடுவார்கள்? இதற்குக் காரணம் நானநல்லவா? அக்பரை என்னால் வெற்றி கொள்ள முடியவில்லை. அவராலும் என்னை வெற்றி கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் மக்களின் நிலை? அவர்கள் குழந்தைகளின் கதி? எத்தனை நாட்களுக்கு இந்தத் தொல்லை?” என விரக்தியில் வாடினார்.

4. ராணா பிரதாப், அக்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த செய்தியை விவரி? கடிதம் கண்ட அக்பர் மற்றும் ராஜபுத்திரர்களின் நிலையை எழுதுக.

பிரதாப் மொகலாயப் பேரரசர் அக்பருக்குச் சமாதான ஓலை எழுதினார். “நான் காட்டுப் பிச்சைக்காரனாகவே காலம் கழித்து விடுவேன். ஆனால் மலர் போன்ற என் மக்கள் காட்டிலே அலைந்து பசியால் தவிக்க, தாகத்தால் புலம்ப என்ன பாவம் செய்தனர்?” என்று தன் இதயத்தைக் கிழித்து அந்த இரத்தத்தால் கடிதம் எழுதியிருந்தார்.

ராணா பிரதாப்பின் கடிதம் கண்ட அக்பருக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. “எத்தனை ஆண்டுகள், எத்தனை முயற்சிகள், எத்தனை போர்களில் எத்தனை இழப்புகள்? அப்பா! கடைசியாக அடங்காத பிரதாபன் அடங்கிவிட்டான்” என்று ஆனந்தம் கொண்டார். மொகலாயர்களிலேயே பலருக்கு இது நம்ப முடியாததாக இருந்தது. “ராணாபிரதாப சிம்மனும் பணிந்தானா?” என்று வியந்தனர். ராஜபுத்திரர்கள் தலை குனிந்தனர்.

வினா எண் - 8

1. பிருத்திவிராய் என்பவர் யார்? இவர் பிரதாபனின் கடிதம் கண்டு மனதிற்குள் எண்ணியது யாது?

அக்பரின் அவையிலே இருந்தார் பிருதிவிராய் என்ற கவிஞர். மேவார் ராஜ குடும்பத்துப் பெண்ணை மணந்து கொண்டு வாழும் ராஜபுத்திரர். ‘இமயமலை தரையை நோக்கித் தலை தாழ்த்திப் புழுதி மண்ணுடன் உடன்படிக்கை செய்து கொள்வதா? ராஜஸ்தானத்தின் மதிப்பு பறி போகலாமா? பிரதாப்பின் இம்மாற்றத்தின் காரணம் என்னவாக இருக்கும்? எதுவானாலும் இந்நிலைக்கு ராணாவை இறங்க விடக்கூடாது’ என்று ஒரு உபாயத்தைக் கையாண்டார் பிருதிவிராய்.

2. பிருத்திவிராய் கையாண்ட உபாயம் யாது?

“ஷாயன்ஷா! இந்தக் கடிதத்தை ராணா பிரதாப் எழுதியிருப்பாரென்று நான் நம்பவில்லை. முப்பதாண்டுகளாகப் போரிட்டுவரும் ஒருவர், இப்படித் திடீரென்று ஒரு நாள் சரணடைவாரா? இது யாரோ பகைவரது சூழ்ச்சி. ராணாவின் கையெழுத்தை நான் அறிவேன். இது பிரதாபருடைய கையெழுத்தல்ல” என்று அக்பரிடம் கூறினார். அக்பரின் மகிழ்ச்சி வரண்டுவிட்டது.

3. பிருத்திவிராய் ராணாவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த செய்தி யாது?

பிருதிவிராய் ரகசியதான ராணா பிரதாபுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். “இணையிலா வேந்தே! இந்துக்களின் பதியே! இந்தியத்தாய்க்கு இனிமேல் யார்கதி? உன் ஒருவனால் அல்லவா அக்பர் இன்று அலமந்து நிற்கிறான்? சந்தையில் சரக்கு வாங்குவதுபோல், பணமும் பதவியும் கொடுத்துப் பாரத

வீரரையெல்லாம் தம்வசப்படுத்திக் கொண்டு வருகிறான், பாரரின் பேரன். சங்கராமின் பேரனான வெற்றிப் பிரதாபன் மட்டும் விலை கொள்ளப்படவில்லை என்று இறுமாந்திருந்தோமே! சகலத்தையும் இழந்தும் குலதர்மத்தை காக்கப் பிரதாபன் இருக்கிறான் என்று பூரித்துக்கிடந்தோமே! ராஜபுத்திரர் பலரும் கோடாரிக்காம்புகளானாலும், குல விளக்கான பிரதாபன் குவலயம் மெச்சஅந்நியனை அதிர்த்து அடங்காது நிற்கிறான் என்று மகிழ்ந்து போயிருக்கும் எங்களைத் தலைகுனிய வைக்கும்படியாக உமது மனவலி குன்றியதென்ன? அக்பருக்கு நீர் அனுப்பிய கடிதம் கெட்ட கனவாக இருக்க வேண்டும். 'எங்கள் பிரதாபன் என்றும் தலைவணங்கான்' என்ற நம்பிக்கையைப் பாழாக்கி விட வேண்டாம்'' என்று தம் கடிதத்தில் ராய் பலப்பல எழுதியிருந்தார்.

4. பிருத்திவிராய் கடிதத்திற்கு ராணா அளித்த பதில் யாது?

பிருதிவியின் கடிதம் கண்ட ராணா பிரதாப்பின் உள்ளம் சிலிர்த்துக்கொண்டது. தூங்கிய சிங்கம் விழித்துக் கொண்டது போலத் தம்மானங் காக்கும் ஆசை தலைதூக்கி அலை மோதியது. 'பிருதிவி, உமது கடிதத்துக்கு முழுவிடை பேனாவால் அல்ல; என் வாளினால் அளிப்பேன்'' என்று பதில் அனுப்பினார்.

வினா எண் 9

1. ராணா பிரதாப்பின் போராட்டத்திற்கு துணை நின்றவர்கள் யார்? விவரி?

பிரதாப், மறுபடியம் வேடுவ இனத்தவர்களை ஒன்றுசேர்த்து, அவர்களுக்குப் போர்ப்பயிற்சி அளித்தார். மேவாரின் அமைச்சர் பாமாஷா தம் செல்வம் அனைத்தையும் ராணாவின் பாதங்களில் சமர்ப்பித்தார். சகோதரன் சக்தி சிங்கும் நிறைய நிதி திரட்டி மஹாராணாவுக்குக் காரணமாக அனுப்பினான். அருமைக் குமாரன் அமரசிங்கும் படை நடத்திச் செல்லும் பிராயத்தை அடைந்திருந்தான். பல வருஷங்களாக ஒதுங்கி இருந்த ராஜபுத்திர அரசர்கள் பலரும் தங்கள் படைகளினாலும் பணத்தினாலும் உதவ முன்வந்தனர்.

2. அக்பர் ராணா பிரதாப்பை அடக்க முற்படாதது ஏன்? விவரி?

புதுப் பலம் கொண்ட ராணா, இழந்த நகரங்களை ஒவ்வொன்றாக மீட்டார். எங்கும் வெற்றி மேல் வெற்றி! கனவா அல்லது நினைவா என்று பிரமித்தனர் பகைவர்கள். அக்பருக்குமே வியப்புத் தாங்கவில்லை. பிரதாபனது பெரு வீரத்தையும் விடா முயற்சியையும் தன்மானம் காக்கும் தகைமையையும் மனத்துக்குள் பாராட்டிய அக்பர், மறுபடியும் ராணா பிரதாப்பை அடக்கி ஒடுக்க முற்படவில்லை.

3. யுத்த தர்மத்தையும் நல்லொழுக்கத்தையும் கடைப்பிடித்தவர் ராணா பிரதாப் விவரி?

எந்தத் துன்பத்திலும் யுத்த தர்மத்தையும் நல்லொழுக்கத்தையும் கடைப்பிடித்து வந்தவர் ராணாபிரதாப். ஒரு சமயம் பிரதாப்பின் மகன் அமரசிங், ரஹீம்கான் கானாவின் படைவீட்டை முற்றுகையிட்டான். குடிபோதையில் மூழ்கிக் கிடந்தனர் மொகலாயர்கள். அனைவரையும் எமனுலகுக்கு அனுப்பிய அமரன், படை வீட்டிலிருந்து ஏராளமான ஆயுதங்களையும் ரஹீமின் மனைவி ஜீனத்தையும் கைது செய்து கொண்டு திரும்பினான். இதை அறிந்த ராணா துடிதுடித்துப் போனார். கடுங்கோபம் கொண்டு, "அமர்! இப்படிச் செய்வதற்கு முன் நீ இறந்திருக்கலாமே, ஒரு பெண்ணைக் கைது செய்து கொண்டுவர உனக்கு வெட்கமாக இலலை?" என்று கேட்டார்.

அமர் தலைகுனிந்து, "நான் தவறுதான் செய்துவிட்டேன் அப்பா. நம் பெண்மணிகளை அவர்கள் கொடுமைப் படுத்தியதை எண்ணிப் பழிக்குப் பழியாக இப்படிச் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்'' என்றான் அமர்சிங்.

அப்பெண்ணை மரியாதையுடன் ரஹீமிடம் கொண்டு போய்ச் சேர்க்கும்படி பணித்தார் பிரதாப்.

4. பாளையக்காரரில் ஒருவர் பிரதாப்பிடம் அளித்த வாக்குறுதி யாது?

“மகாராணா! மொகலாயப் பேரரசை அலமங்கச் செய்தோம். மேவாரின் பெரும் பகுதிகளை மீட்டுவிட்டோம். சித்தூரை மீட்கவில்லை. உண்மைதான். எங்கள் உயிர்மீது ஆணையிட்டுக் கூறுகிறோம். எப்படியும் சித்தூர் விடுதலை பெறும். தாங்கள் மனச் சாந்தியுடன் பவானியின் பாதம் சேரலாம். இதைத் தவிர தங்களது உள்ளத்தை உறுத்துவது வேறு ஏதாவது இருக்குமானால் தெரிவியுங்கள். அதையும் நிறைவேற்றி வைப்போம்” என்றார்.

5. மரணப் படுக்கையில் இருந்த ராணா பிரதாப் கவலை கொள்ளக் காரணமாக இருந்த நிகழ்ச்சியை விவரி?

மரணப் படுக்கையில் இருந்த மகா ராணா பிரதாப் நெஞ்சடைக்கக் குரல் தழுதழுக்கக் கூறினார். “என் துணைவர்களே! என் கவலையெல்லாம் மறுபடியும் மேவார் நாடு மொகலாயர் வசப்பட்டு விடுமோ என்றுதான். இப்படியொரு கவலை ஏன் எனக்கு ஏற்பட்டது என்று உங்களுக்கு ஐயம் ஏற்படலாம், கூறுகிறேன். முன்பு நாடிழந்து காடு மலைகளில் ஓடி ஒளிந்து வாழ்ந்த போது, ஒரு சமயம் புஷ்கர ஏரிக் கரையிலே குடிசை போட்டுத் தங்கியிருந்தோம் நினைவிருக்கிறதா? ஒரு நாள் இளவரசன் வெளியிலிருந்து உள்ளே நுழைந்தபோது, கூரையில் நீண்டு நின்ற குச்சியொன்று அவன் தலைப்பாகையில், மாட்டி அதைக் கிழித்து விட்டது. அப்போது அவன், “இந்தக் குடிசையில் வாழும்படியாயிற்றே” என்று முணுமுணுத்தது இன்னும் என் காதுகளில் ஒலிக்கிறது. மாபெரும் எதிரியான அக்பருடன் அரும் போர் நடத்தியதை அவன் நினைக்கவில்லையே. எனக்குப் பின் மேவாரின் ராணாவாக அவன்தானே வருவான். சுகபோக வாழ்க்கையைத் துறந்து, சித்தூரை மீட்பானா அவன்? இன்று அக்பர் பேசாதிருப்பது சந்தர்ப்பத்தை நோக்கித்தான். அவருக்குப் பிறகு அவரது மகன் ஸலீம் பட்டமேறியதும் நமது மேவாரை சுதந்திரமாக இருக்கவிட மாட்டான். அமரன் அரியணையில் அமர்ந்ததும் ஆடம்பர வாழ்க்கையில் மூழ்கிப் போவான். மேவாரின் மானத்தைக் காப்பது இனி யார்? இதுவே என் உள்ளத்தை வாட்டும் வேதனை” என்றார் பிரதாப்.

# மாவீரன் சத்ரசால்

வினா எண் 1

1. ராஜபுத்திரர்களின் வீரம் குறித்து எழுதுக.
   ராஜபுத்திரர்களின் வீரம் உலகமறிந்க ஓர் ஒப்பற்ற அற்புதம். உலகில் எந்த நாட்டு மக்களுக்கும் இல்லாத அதிசய ஆற்றலும் மனோதிடமும் கொண்டவர்கள் ராஜபுத்திரர்கள். நேர்மைக்கும் உண்மைக்கும் உறைவிடம் அவர்கள். நன்றி மறவாத நாயகர்கள். ராஜ புத்திரர்களின் வீரத்தைக் கேட்கும் கோழையும் கூட வாள் வீசப் பாய்ந்து எழுவான்.

2. மாவீரர் சத்ரஸால் மன்னரைப் பற்றி குறிப்பு வரைக.
   பண்டி நான்ற நாட்டின் மன்னன் ராஜா ராவ் சத்ரஸால். சத்ரஸாலைச் சங்காதனத்தில் அமர்த்தியவர் ஷாஜகான். ஷாஜகானும் வீரர் சத்ரஸாலை ஆக்ராவின் கவர்னராக்கிக் கௌரவித்தார். மாவீரர் சத்ரஸால், ஷாஜகானுக்காக எத்தனையோ போர்களில் வெற்றிவாகை சூடி வந்திருக்கிறார். நன்றி மறவாத நல்ல வீரர் சத்ரஸால். 'ஹரா' என்ற இனத்தைச் சேர்ந்தவர். 'ஐம்பத்திரண்டு போர்களில் வெற்றி கண்டு 'மாவீரன்' என்ற பட்டப்பெயர் பெற்றவர் இவர்.

3. ஷாஜஹானின் புதல்வர்கள் யார்? யார்? புதல்வியின் பெயர் என்ன?
   மாமன்னர் ஷாஜகானுக்கு நான்கு புதல்வர்கள். தாரா மூத்த மகன். ஷுஜா, மூரத், ஔரங்கசீப் ஆகிய மூவரும் இளையவர்கள். புதல்வியின் பெயர் ஜஹனாரா. புகைந்து கொண்டிருந்த அரசுரிமைப் போராட்டம் ஒரு நாள் குபீரென்று பற்றிக் கொண்பது. தகப்பனாருக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினார்கள் இளைய புதல்வர்கள். முறைப்படி மூத்தவனான தாரா, சிங்காதனத்தில் அமருவதை விரும்பவில்லை தம்பிகள். அதிலும் கடைசி மகனான, தந்திரசாலி ஔரங்கசீப், தானே டில்லி சங்காதனத்தில் உட்காரத் திட்டமிட்டான். தான் நினைத்ததை முடிப்பதற்காக எதையும் செய்யத் தயங்காத குரூர குணம் படைத்தவன் ஔரங்கசீப்.

4. ஔரங்கசீப்பிடம் அனுப்பப்பட்ட மன்னன் யார்? அவரிடம் ஔரங்கசீப் கேட்டுக் கொண்டது யாது?
   அரசுரிமைப் போர் ஆரம்பமானபோது, தென்னாட்டின் கவர்னராக இருந்தான் ஔரங்கசீப். அவனுடன் இருந்தார் சத்ரஸால். மன்னர் ஷாஜஹான் தம் மைந்தர்களுக்குக் காவலாகவும் துணையாகவும் பல ராஜபுத்திரத் தளபதிகளை அனுப்புவது வழக்கம். ராஜபுத்திரர்கள் தங்கள் படைகளுடன் இளவரசர்களுக்கு ஆலோசகர்களாக இருப்பார்கள். அப்படித் தக்காணத்தில் ஔரங்க சீப்புடன் இருந்தார் சத்ரஸால். தம் தளபதி சத்ரஸாலின் வீரத்தையும் ஆற்றலையும் அறிவான் ஔரங்கசீப். ஆரம்பத்தில், மன்னர் ஷாஜஹானுக்கு எதிராக, தம் பக்கம் இருக்கும்படி நயமான வார்த்தைகளால் கேட்டுக் கொண்டான் ஔரங்கசீப். ஆனால் சத்ரஸால் சம்மதிக்கவில்லை.

வினா எண் 2

1. சத்ரஸால் தக்காணத்திலிருந்து கிளம்ப முடிவு செய்தது ஏன்? எவ்வாறு வெளியேறினார்?
   சக்கரவர்த்தி ஷாஜகானுக்கு, அவருடைய மகன்களாலேயே ஆபத்து ஏற்பட்டுள்ள இந்த வேளையில், தாம் அவர் அருகே இருப்பதையே விரும்பினார் ராஜப்புத்திர வீரர். தக்காணத்திலிருந்து கிளம்ப முடிவு செய்தார். சத்ரஸாலின் பிடிவாதமான முடிவை அறிந்து ஔரங்கசீப், அவருடைய கூடாரத்தைச் சூழ்ந்து கொள்ளும்படி தம் முகலாய வீரர்களுக்கு ஆணையிட்டான். தம்மை டில்லிக்குப் போக விடாமல் இப்படி ஏதாவது செய்வான் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்த சத்ரஸால், ஔரங்கசிப்பின் ஆட்கள் தம்

கூடாரத்தை சூழ்ந்துகொள்ளும் முன்னமே, தமது பரிவாரம் மற்றும் பொருள்களையெல்லாம் எச்சரிக்கையுடன் வெளியேற்றிவிட்டார்.

2. ஆரஞ்சு வண்ண ஆடையின் பெருமையையும், அதை அணிந்த சத்ரஸால் மற்றும் வீரர்களும் போரிடக் காரணம் என்ன?

சத்ரஸால் தமது வீரர்களையும், மற்றும் ராஜவிசுவாசமுள்ள ராஜபுத்திரர்களையும் ஒன்று திரட்டினார். தங்களது நன்றிக் கடனைச் செலுத்த, ஷாஜகானுக்காக உயிரையே கொடுப்பது என்று அவர்கள் சபதம் எடுத்துக்கொண்டனர். எல்லோரும் ஆரஞ்சு வண்ண ஆடை அணிந்தார்கள். ஔரங்கசீப்பின் வீரர்களை எதிர்க்கத் தயாரானார்கள். இதை முகலாய வீரர்கள் எதிர்பார்க்கவில்லை. முதலில் திகைத்தார்கள். அவர்களுக்குத் தெரியும், ராஜபுத்திர வீரர்கள் இப்படிக் குங்குமம்பூ வண்ண ஆடை அணிந்தால் அதன் பொருள் என்ன என்று. “வாழ்வு அல்லது சாவு” என்ற முடிவோடு போரிடும்போதுதான் ராஜபுத்திரர்கள் இத்தகைய காவி வண்ண ஆடை அணிவது வழக்கம்.

3. சத்ரஸாலும் அவர் சகாக்களும் எவ்வாறு ஆக்ரா நகர் வந்தடைந்தனர்? விவரி?

சத்ரஸாலையும் அவரது படைகளையும் எதிர்த்தார்கள் முகலாயர்கள். நர்மதை நதி வரையில் பின்தொடர்ந்து போனார்கள். நர்மதையில் அப்போது வெள்ளம் இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு ஓடியது. வெள்ளத்தினால் வெறி கொண்டு ஓடும் நதியை அவர்களால் கடக்க முடியாது, சுலபமாக மடக்கி விடலாம் என்று மனப்பால் குடித்தார்கள் முகலாயர்கள். வீர குணம் ராஜபுத்திரர்களுக்கு மட்டும்தானா? அவர்களுடைய குதிரைகளுக்குமே கூட உண்டு. ராஜபுத்திரர்களுடைய குதிரைகள் நிகழ்த்திய சாகஸங்கள் எத்தனை எத்தனையோ, வாளாகக் குத்தும் குளிர்ந்த நீரிலே தங்கள் குதிரைகளை விரட்டினார்கள். கம்பீரமாகக் கனைத்துக் கொண்டு, குதிரைகளும் ஆற்று வெள்ளத்திலே இறங்கி நீந்தி அக்கரை சேர்ந்தன. சத்ரஸாலும் அவரது வீரர்களும் பத்திரமாக ஆக்ரா நகர் போய்ச் சேர்ந்தார்கள்.

4. ஷாஜஹானின் புதல்வி சத்ரஸாலிடம் அனுப்பி வைத்த பொருளைக் குறித்தும், சத்ரஸால் எடுத்த முடிவையும் எழுதுக.

தகப்பனாரின் ஆசியும் அன்புமோ மூத்த மகன் தாராவிடம்தான். ஆகவே தாராவுக்குப் பலம் சேர்க்கத் தீர்மானித்தாள் ஜஹனாரா. தம் தம்பி ஔரங்கசீப்பிடமிருந்து தப்பி, வீரர் சத்ரஸால் ஆக்ரா வந்துள்ள செய்தி அறிந்தாள். தன்னுடைய கங்கணத்தை அவருக்கு அனுப்பி வைத்தாள். ஒரு பெண், தன் கங்கணத்தை மாற்றானுக்கு அனுப்பினால், அவன் அவளைத் தன் சகோதரியாக (ராகி பந்த் பாய்) ஏற்றுக் கொள்ள வேண்டும். ராஜபுத்திரர்களின் வழக்கம் இது. சத்ரஸால் ஜஹனாராவைச் சகோதரியாக ஏற்றுக் கொண்டார். அவள் பொருட்டுத் தாராவுக்காக, அவனது இரு தம்பிகளான ஔரங்கசீப், மூரத் இருவரின் பெரும் படையையும் சந்திக்கத் தம் இனத்தவருடன் தயாரானார் சத்ரஸால்.

<u>வினா எண் 3</u>

1. போர்க்களத்தில் இளவரசன் செய்த செயல் யாது? சத்ரஸால் கூறிய வீர உரையினை எழுதுக.

போர்க்களத்தில் இளவரசன் தாராவுக்கு யாரோ தவறான தகவலைத் தரவே தாரா தனது பட்டத்து யானை மீதிருந்து கீழே இறங்கி விட்டான். விரோதிகளின் சதிச் செயல் இது. இளவரசன் தாரா, யானை மீதில்லாததைக் கண்ட போர்வீரர்கள், தங்கள் இளவரசந் இறந்து விட்டதாகப் பீதி அடைந்து போர்க்களத்தை விட்டு ஓடத் தலைப்பட்டதாகப் பீதி அடைந்து போர்க்களத்தை விட்டு ஓடத் தலைப்பட்டார்கள். ஆனால் சத்ரஸால் ஓடவில்லை. வீர ராஜபுத்திரராயிற்றே. தம் வீரர்களை நோக்கிக் கர்ஜித்தார். “ஓடுபவர்கள் கோழைகள்; வெறுக்கப்பட வேண்டியவர்கள். மன்னர் ஷாஜகானின் உப்பைத்

தின்றவன் நான். என் கால்கள் இந்தப் போர்க்களத்திலிருந்து நகராது. வெற்றி பெற்றால் தான்நான் யுத்த பூமியிலிருந்து உயிரோடு திரும்புவேன், நகருவேன்.

2. சத்ரஸால் போரில் நிகழ்த்திய அற்புதங்களை விவரித்து எழுதுக. (அல்லது) சத்ரஸாலின் உயிர்த்தியாகம் மகத்தானது – விவரி?

சத்ரஸால் தமது போர் யானை மீது ஊறி அதை நடத்தினார். ஒரு பீருங்கி அவரது யானையைத் தாக்கவே யானை பீதி கொண்டு திரும்பி ஓடலாயிற்று. பண்டிவீரர் சத்ரஸால் அதன் முதுகிலிருந்து கீழே குதித்தார். தமது அருமைக் குதிரையான ஜவாடியாவை குரலெழுப்பி, அருகே வருமாறு அழைத்தார்.

'என் யானை புறமுதுகிட்டு ஓடலாம். ஆனால் அதன் தலைவனான சத்ரஸால் உயிரோடு ஓர் அங்குலம் கூடப் பின்வாங்க மாட்டான்'' என்று கூறி அருகே வந்த ஜவாடியாவின் மீதேறி இளவரசன் மூரத்தைக் தாக்கலானார். தமது ஈட்டியை மூரத்தின் மீது எறிவதற்கு ஓங்கிய அதே வேளையில் எதிரியின் குண்டு சதரஸாலின் தலையைத் துளைத்துச் சென்றது.

3. சரித்திரம் கூறும் உண்மை யாது?

துரோகமும் சூழ்ச்சியும் வஞ்சனையும் வெற்றி பெற்றன. தன் சகோதரர்களையெல்லாம் கொன்றுவிட்டுத் தாமே டில்லி சிம்மாசமேறினார் ஔரங்கசீப். தம் தந்தையை அவர் சாகும்வரையில் கைதியாகவே வைத்திருந்தார் ஔரங்கசீப். இது சரித்திரம் கூறும் உண்மை.

# ஜெய்மல்லும் புட்டாவும்

<u>வினா எண் 1</u>

1. நாட்டைக் காக்காமல் ஓடிய மன்னன் யார்? அவனைப் பற்றி எழுதுக.

   மாவீரன் ராணா சாங்காவின் மகன் உதயசிம்மன். உதவாக்கரையாக விளங்கினான். கேளிக்கைப் பிரியனாக வாழ்ந்தான். ராஜபுத்திர குலத்துக்கே ஓர் இழுக்காக வந்தவன் உதயன். உதயசிம்மனின் ஆட்சியிலே மேவாரின் பல பகுதிகள் அக்பரின் ஆதிக்கத்துக்கு உள்ளாயின. வீரமற்ற மன்னன் வீணன் என்று மக்கள் அவனை வெறுத்தார்கள். ஒரு சமயம், அக்பரின் முற்றுகையிலிருந்து சித்தூரைக் காக்க முடியாத கோழை மன்னன் உதயன், தன் பெண்டு பிள்ளைகளுடன் பத்திரமான இடத்துக்குத் தப்பி ஓடிவிட்டான்.

2. நாட்டைக் காக்கும் பொறுப்பு ஏன் இரு சிறுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது?

   ராஜபுத்திரர்களின் புனிதமான தலைநகரைக் காக்கும் உரிமை ராஜ குலத்தில் உதித்தவர்களுக்குத்தான் உண்டு. மேவாரில் பதினாறு இனத்தவர்களை மிக உயர்ந்த குடிப்பிறப்பு உடையோர்களாகக் கருதுவர். அத்தகைய உயர் குடியில் வந்தவர்கள்தான் ஜெய்மல்லும் புட்டாவும். இவ்விருவருடைய தந்தையரும் சித்தூரைக் காக்கும் பணியில் போர்க்களத்தில் தங்கள் உயிரை அர்ப்பணித்தவர்கள்.

3. ராஜபுத்திரர்கள் மேற்கொண்ட சபதம் யாது?

   அந்நியனோடு போராடச் சக்தியற்ற மன்னன் ஊரைவிட்டு ஓடியதற்காக மக்கள் மகிழ்ச்சியே அடைந்தார்கள். "தாய் நாட்டை அந்நியனுக்கு அடிமையாக விடமாட்டோம். எப்படியும் எத்தனை உயிர்களைப் பலி கொடுத்தாகிலும் அதைக் காப்போம்" என்று சபதம் மேற்கொண்டார்கள் வீரராஜபுத்திரர்கள்.

4. ஆரஞ்சு வண்ண ஆடையின் பெருமையை எழுதுக.

   புட்டாவின் தாய் தன் மகனுக்குக் காவியுடை அணிவித்துப் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தாள். துறவிகள் அணியும் காவியுடை அல்ல இது. ராஜபுத்திர வீரர்கள் உடுக்கும் ஆரஞ்சு வண்ண ஆடை இது. இந்த ஆடை உடுத்தினால் ஒன்று வெற்றி அல்லது வீர மரணம். அத்தகு ஆடை உடுத்தி தம் மகனைப் போர்க்களத்துக்கு அனுப்பினாள் அந்தத் தாய்.

<u>வினா எண் 2</u>

1. புட்டாவின் தாய் ஆற்றிய வீர உரையை எழுதுக.

   புட்டாவின் தாய், சித்தூரின் வீர ராஜபுத்திர மங்கையர்களை ஒன்று சேர்த்தாள். "மன்னன் நகரின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை நம்மிடம் விட்டுவிட்டு ஓடிவிட்டான். வீர ராஜபுத்திரர்கள் நகரைக் காக்க உறுதி பூண்டு போர்க்களம் புகுந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உதவுவது நமது கடமை. தலைநகர் மாற்றான் வசப்பட்டால் கௌரவமான முறையில் தீக்குளித்து உயிர் துறப்பதற்குத் தீ மூட்டக் கூட நமக்கு நேரம் இருக்காது. அந்நியர்களின் அடிமைகளாகி விடுவோம். அந்த இழி நிலைக்கு இலக்காக விருப்பமில்லாதவர்கள் என்னுடன் போர்க்களத்துக்குக் கிளம்புங்கள். உயிரின் மீது ஆசை உள்ளவர்கள் இங்கேயே இருக்கலாம்" என்றாள். ராஜபுத்திர நாரீமணிகள் அத்தனை பேரும் கையில் ஆயுதமேந்திப் புட்டாவினுடைய அன்னையின் ஆணையை ஏற்று அவளைப் பின்தொடர்ந்தனர்.

2. ராஜபுத்திரர்கள் மரணத்தை விரும்புகிறவர்கள் ஏன்?

மாதர்களின் வீரம் கண்ட கோழையும் வாள் எடுத்துக் கிளம்பினான் போர்க் களத்துக்கு. இதுவரை காணாத வகையில் சித்தூர் இரத்தினங்கள் போரிட்டன. ''ராஜபுத்திரர்கள் மரணத்தை விரும்புகின்றவர்கள்'' என்று அந்நியர்கள் வியந்து போற்றும் வகையில் இருந்தது அந்தப் போர்.

3. புட்டா, ஜெய்மல்லின் போர்க்களக்காட்சியை விவரி?

புட்டாவின் அன்னையும் மனைவியும் கையில் வாளேந்தி விரோதியை வீழ்த்த முற்பட்டு வீழ்ந்தபின் புட்டாவின் வீரம் பன்மடங்காயிற்று. வாளைச் சுழற்றினான். பல தலைகள் உருண்டு வீழ்ந்தன. வெற்றிமுகம் காணும் போது விரோதிகள் அவனை வீழ்த்திவிட்டனர். புட்டாவின் இடத்தில் உடனே ஓடிவந்து நின்றான் ஜெய்மல். ராஜபுத்திர வீரர்கள் புதிய வேகம் கொண்டு போரிட்டார்கள். அன்றையப் போர் ஜெய்மல்லுக்கு வெற்றியாகவே முடிந்திருக்க வேண்டும். ஆனால் பாரதத்தின் விதி வேறு விதமாக இருக்கும்போது, வெற்றி எப்படி கிட்டும்? அக்பரின் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய ஒரு குண்டு ஜெய்மல்லின் உயிரைக் குடித்து பசி அடங்கியது.

4. அக்பர் தாம் ஒரு மாவீரன் என எவ்வாறு நிரூபித்தார்? (அல்லது) அக்பர் ஏன் மலைக்கலானார்?

மாவீரரான அக்பருக்கு அந்தப் போரிலே ஜெய்மல்லும் புட்டாவும் காட்டிய வீரத்தை மறக்கவே முடியவில்லை. "பதினாறே வயதான இளைஞர்களான அவர்கள் எத்தகைய சாகஸம் புரிந்தார்கள். இத்தகைய இளைஞர்களைக் கொண்ட பாரதத்தை என்றைக்கு நாம் நம் வசப்படுத்திக்கொள்ளப் போகிறோம்?" என்று மலைக்கலானார்.

ஜெய்மல், புட்டா என்ற அந்த இளஞ் சிங்கங்களின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்படி செய்ய நினைத்தார். தில்லியில் உள்ள தன் அரண்மனை வாசலின் இரு பக்கங்களிலும் இரண்டு யானைகள் மீது அவ்விரு வீர வாலிபர்களும் அமர்ந்திருப்பது போன்ற சிலை வடித்து நிறுவினார்.

# ராஜா தோடர்மல்

<u>வினா எண் 1</u>

1. தோடர்மல் குறிப்பு வரைக.

அக்பரின் அவையை அலங்கரித்த, ஒன்பது இரத்தினங்கள் என்று புகழப்பட்ட ஒப்பற்ற அறிவாளிகளுள் ஒருவர் இந்தத் தோடர்மல். இவர் ராஜ குடும்பத்தில் பிறந்தவரல்லர். சாதாரணக் குடும்பத்தில் பிறந்த ஓர் இந்தியக் குடிமகன்தான். உத்திரப் பிரதேசத்தில் உள்ள சீதாபுர் மாவட்டத்தைச் சேர்ந்த லஹர்புர் என்ற கிராமத்தில் பிறந்தவர் தோடர்மல்

தம் பிராந்தியங்களிலிருந்து வரி வசூலிக்கும் இலாகாவில் சாதாரணக் குமாஸ்தாவாக இருந்த தோடர்மல், தம் மேலதிகாரிகளுக்கு வரி வசூல் செய்வதில் உள்ள எளிய நியாயமான முறைகளைப் பற்றி விளக்குவார்.

2. சாம்ராஜியம் முழுவதும் உள்ள நிலங்களுக்கு வரிவிதிக்கும் பொறுப்பு தோடர்மல்லிடம் ஒப்படைக்கப்பட காரணம் என்ன?

1573 ஆம் ஆண்டில் அக்பர், குஜராத் மாகாணத்தை வெற்றி கொண்டார். அங்குள்ள நிலங்களைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தோடர்மல்க்கு அளித்து, அவரை அங்கு அனுப்பி வைத்தார். தோடர்மல் நிலங்களை அளந்து அவற்றின் தரம், அளவு, விளைவு ஆகியவற்றைக் கணக்கிட்டு அது அதற்குத் தக்கவாறு வரிகளை நிர்ணயித்தார். இரண்டே ஆண்டுகளில் நிலைமை சீரடைந்து விட்டது. விவசாயிகள் திருப்தியுடன் வரி செலுத்தினர். கஜானாவிலும் பொருள் குவிந்தது. இதனால் மிக்க மகிழ்ச்சி அடைந்த அக்பர், தமது சாம்ராஜ்யம் முழுவதிலுமுள்ள நிலங்களுக்கு வரி விதிக்கும் பொறுப்பைத் தோடர்மல்லிடம் ஒப்படைத்தார். அவருக்கு 'ராஜா' என்ற விருதையும் அளித்துக் கௌரவித்தார்.

3. கரோடிகள் என்பவர்கள் யார்? அவர்களை ஒடுக்கக் காரணம் என்ன?

அக்பரது பரந்த சாம்ராஜ்யத்தை தோடர்மல் 182 மண்டலங்களாகப் பிரித்தார். ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வரியாகக் கிடைத்தது. ஒவ்வொரு மண்டலமும் 'கரோடி' என்ற அதிகாரியின் மேற்பார்வையில் இயங்கியது. இந்தக் கரோடிகள் விவசாயிகளிடம் கருணை காட்டாத கொடியவர்களாக இருந்தனர். இஷ்டப்படி வரி விதித்தனர். தோடர்மல்லிடம் அதிகாரம் வந்ததும் இந்தக் கரோடிகளைக் கடுமையாக தண்டித்தார். பலரைச் சிறையில் தள்ளினார்.

4. நாட்டின் நிலங்களை எத்தனை வகைகளாகப் பிரிக்கப்பட்டு வரி வசூலிக்கப்பட்டது? நிலங்களை அளக்கும் முறையில் இவர் செய்த மாற்றங்களை விவரி?

தோடர்மல் நிலங்களை அளவெடுக்கத் தொடங்கும்போது சணல் கயிறுகளால் அளக்கும் பழக்கம் இருந்தது. சணல் கயிறுகள் நனைந்தால் அவை சுருங்கி விடும். உலர்ந்ததும் நீண்டு பெரியதாகும். ஆகவே இக்குறையை நீக்க, இரும்புப் பட்டை கட்டிய மூங்கிலினால் ஆன அளவுத் தடிகளை உருவாக்கி, அதன் மூலம் நிலங்களை அளக்கச் செய்தார். கிராம மணியகாரர்கள், தங்கள் பிராந்தியத்தில் உள்ள நிலங்களை அளந்து பதிவு செய்து, அவற்றின் தகவல்களை மத்திய நிதி இலாகாவுக்கு அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டார். மத்திய நிதி இலாகாவின் தலைமை அதிகாரியான தோடர்மல், நாட்டிலுள்ள நிலங்களை போலஜ், பட்தீ, சாசர், பஞ்சர் என்று நான்கு வகைகளாகப் பிரித்தார். போலஜ் ஆண்டுக்கு இரு போகம் விளையும் மிக உயர்ந்த வகை நிலம். ஓர் ஆண்டு பயிர்செய்து அடுத்த ஆண்டு தரிசாகப் போடப்படும் நிலங்கள் பட்தீ எனப்பட்டன. ஒரு தடவை விளைந்த பிறகு மூன்று நான்கு ஆண்டுகள் தரிசாகக் கிடப்பவற்றை சாசர் வகையில் கணக்கிட்டார். இப்படி, ஒவ்வொரு வகை நிலங்களிலும் ஓர் ஏக்கரின் சராசரி விளைச்சலைக் கணக்கிட்டு அதற்குத் தக்கபடி வரி விதித்தார் தோடர்மல்.

வினா எண் 2

1. வரிவசூலில் ராஜா தோடர்மல் செய்த மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் விவரி?

வரி வசூலில் இன்னும் பல முன்னேற்றங்களையும் மாற்றங்களையும் செய்து, நாட்டின் பொருளாதாரத்தையும் அமைதியையும் அதிகமாக்கினார். முந்தய பத்தாண்டுகளில் தானியங்களின் விலை ஏற்ற இறக்கங்களைக் கணக்கிட்டு அதற்குத் தக்கபடி ரொக்கமாகவும் வரி செலுத்தலாம் என்ற வழக்கத்தை ஏற்படுத்தினார். விவசாயிகள் விரும்பினால் தானியமாகவும் தரலாம் என்று வசதி செய்து கொடுத்தார். பஞ்சம் பருவநிலை பொய்த்தல் ஆகிய நெருக்கடிக் காலங்களில் வரிகளைக் குறைத்தோ அல்லது முழுவதுமாக 'வஜா' நீக்குதல் செய்யலாம் என்ற வழக்கத்தையும் கொண்டு வந்தார். இதற்குத்தான் 'தக்காவிக் கடனுதவி' என்று பெயர். இத்தகைய சீர்திருத்தங்களால் விவசாயிகளுக்குத் தெய்வமாகவும் அடாவடி வரி வசூலில் ஈடுபடும் அரசாங்க ஊழியர்களுக்கு எமனாகவும் விளங்கினார் தோடர்மல்.

2. தக்காவிக் கடனுதவி என்றால் என்ன?

பஞ்சம் பருவநிலை பொய்த்தல் ஆகிய நெருக்கடிக் காலங்களில் வரிகளைக் குறைத்தோ அல்லது முழுவதுமாக 'வஜா' நீக்குதல் செய்யலாம் என்ற வழக்கத்தையும் கொண்டு வந்தார். இதற்குத்தான் 'தக்காவிக் கடனுதவி' என்று பெயர்.

3. இந்துக்கள் அரசாங்க உயர் பதவிகளில் அமர தோடர்மல் செய்த செயல் யாது? விளக்குக.

அரசாங்க உயர் பதவிகளில் முஸ்லிம்களைப் போலவே இந்துக்களும் இடம் பெற வேண்டும் என்பதல் நாட்டம் உடையவராக இருந்தார் தோடர்மல். அதற்காக வரி வசூல் சம்பந்தமான புத்தகங்களைப் பாரசீக மொழியில் வெளியிட்டார். இதைப் படித்துத் தெரிந்து கொள்ள இந்துக்களும் பாரசீக மொழியைப் பயின்றனர். பாரசீக மொழி தெரிந்ததால் இந்துக்கள் அரசாங்கத்தில் உயர் பதவிகளைப் பெறுவது சுலபமாயிற்று.

4. தோடர்மல் தன் வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொண்டார்? விவரி?

முஸ்லிம் அரசில் உயர் பதவி வகித்தாலும் தோடர்மல் தாம் ஓர் இந்து என்பதை மறந்ததே இல்லை. தினமும் பூஜையை முடிக்காமல் எந்த வேலையையும் மேற்கொள்ள மாட்டார். வீட்டில் இந்துவாக உடையணிந்திருப்பார். அரசவைக்குப் போகும் போது மட்டுமே மொகலாய பாணியில் உடையணிந்து போவார். துருக்கர் போல் உடை அணிவதாலும், அந்த மொழியைப் பேசுவதாலும் ஓர் இந்து துருக்கியராகிவிடமாட்டான் என்பது தோடர்மல்லின் கருத்து. அக்பரின் புதிய மதமான 'தீன்இலாஹி' இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்து இந்துவாகவே இருக்க வேண்டும் என்று விரும்பி, அதன்படி வாழ்ந்து காட்டியவர் தோடர்மல்.

வினா எண் 3

1. தோடர்மல் எங்கெங்கு அமைதியை நிலைநாட்டினார்? விவரி?

தில்லியிலிருந்து வெகு தொலைவில் இருந்ததால் வங்கத்தில் அடிக்கடி கலகம் ஏற்பட்டு வந்தது. ஆகவே அதை ஒழுங்குபடுத்தத் தோடர்மல் அங்கு அனுப்பப்பட்டார். நான்கே ஆண்டுகளில் வங்கத்தின் நிர்வாகத்தை ஒழுங்காக்கி, அங்கு அமைதியை நிலை நாட்டினார். அதே போல் குஜராத்தில் சுல்தான் ஜபரைத் தோற்கடித்து அங்கும் அமைதியை உண்டாக்கினார்.

2. அக்பரின் படைபலத்தை அதிகரிக்க தோடர்மல் எவ்வாறு செயல்பட்டார் என்பதை விவரி? (அல்லது) மன்சப்தார்களின் செயல்பாடுகளை விளக்குக. (அல்லது) தோடர்மல் கொண்டு வந்த மாற்றங்களை விவரி?

நிலச் சீர்திருத்தம் தோடர்மல்லின் சிறப்பான ஏற்பாடு என்றாலும் அக்பரின் படை பலத்தை அதிகரித்து அதிலும் பல சீர்திருத்தங்களைச் செய்தவர் தோடர்மல். அந்தக் காலத்தில் மன்ஸப்தாரி என்ற வழக்கம் உண்டு. மன்ஸப்தார்கள் தங்கள் பொறுப்பில் தரைப்படை, குதிரைப்படைகளைப் பராமரித்து வருவர். இதற்காக மன்னர் இவர்களுக்குச் சம்பளம் கொடுத்து வந்தார். மன்ஸப்தார்கள் இந்தச் சம்பளத்தை வாங்கித் தங்கள் சொந்தச் செலவுகளைச் செய்து கொண்டு, மன்னரின் பேட்டியின்போது வாடகைக் குதிரைகளை அமர்த்தி அதைக் காட்டி வந்தனர். இதை அறிந்த தோடர்மல் குதிரைகளுக்குச் சூடு போட்டுக் குறியிடும் முறையைக் கொண்டு வந்தார். வாடகைக் குதிரைக்குச் சூடுபோட முடியுமா? சூட்டுக் குறியுள்ள குதிரைகள் அரசாங்கச் சொத்தாகிவிடுமே. இதுபோல் தங்களிடமுள்ள படை வீரர்களின் பெயர்ப்பட்டியலையும் ஒவ்வொரு மன்ஸப்தாரும் வைத்திருக்க வேண்டும் என்று சட்டமிட்டார்.

3. தோடர்மல்லின் விரோதிகளும் வியக்க காரணம் என்ன? விவரி.

அக்பருக்குத் தோடர்மல்லிடம் அசைக்க முடியாத நம்பிக்கை. பெரிய பொறுப்புகளை அவரிடம் ஒப்படைத்தார் அக்பர். 1589இல் அக்பர் காஷ்மீர்ப் பயணத்தை மேற்கொண்டபோது, ராஜ்யத்தின் நிர்வாகத்தையும் தலைநகர்ப் பாதுகாப்பையும் தோடர்மல்லிடமே ஒப்படைத்துப் போனார் என்றால் பாருங்கள். தோடர்மல்லினுடைய விரோதிகளும்கூட, அவரது துணிவையும் நேர்மை தவறாத ஆட்சி முறையையும் வெகுவாகப் பாராட்டினர்.

4. தோடர்மல்லின் இறுதிக்காலத்தை விவரி?

தோடர்மல்லுக்கு வயதாகிவிட்டது. தமது கடைசிக் காலத்தை ஹரித்துவாரத்தில் கழிக்க விரும்பினார். அவரது வேண்டுகோளை அக்பரும் ஏற்றுக் கொண்டார். ஹரித்துவாரத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது அக்பரிடமிருந்து ஓர் உத்தரவு வந்தது. “கடவுளின் படைப்பான மனிதருக்குச் செய்யும் தொண்டே உண்மையான கடவுள் வழிபாடாகும்” என்று அதில் எழுதப்பட்டிருந்தது. அரசாங்கத்தில் அவரது சேவை இன்னும் கொஞ்ச காலத்துக்குத் தேவை என்பதைக் குறிப்பாக உணர்த்தியிருந்தார் அக்பர். தோடர்மல்லும் அதைப் புரிந்துகொண்டு தம் பிரயாணத்தை நிறுத்திவிட்டுத் தலைநகருக்குத் திரும்பிவிட்டார்.

ஆனால்... இதற்குப் பதினோராவது நாளில் தோடர்மல் கொல்லப்பட்டார். ஏதோ ஒரு குற்றத்துக்காக முன்பு அவரால் தண்டிக்கப் பெற்றவன், அதற்காகப் பழி தீர்த்துக் கொண்டுவிட்டான்.

THE LANDLENS SUITE

# Eight ways to know a piece of land before you pay for it.

This report covers one part of the picture. These cover the rest, drawn from the same government records, for any property in Tamil Nadu.

### LandLens One
Ask anything about a property and get an answer grounded in live government records, with the sources shown.
/landlens/one

### Verify My Land
Every record check run on one property and returned as a single report.
/landlens/verify-my-land

### Legal Opinion
An advocate's written opinion on the title, built on the records we pull for it.
/landlens

### One Map
Every layer on one map: the parcel, its boundary, zoning, water bodies and what sits around it.
/landlens/one/map

### PriceMap
What land actually changed hands for around this plot, taken from the registered deeds.
/landlens/pricemap

### Build Scope
What you are allowed to build here: floor space, height, coverage and setbacks.
/landlens/build-scope

### Property Tracker
Watch a property and hear about it when something new is registered against it.
/landlens/property-tracker

### Deal Room
Run the transaction in one place: documents, stamping, signatures and the parties.
/landlens/deal-room

FREE TOOLS · NO ACCOUNT NEEDED

# Twenty-four checks you can run yourself, at no cost.

## Records and verification

The registers themselves, read for you.

- Encumbrance Certificate
- Patta and Chitta
- Field Measurement Sketch
- EC Analyzer
- Bank charge check
- Court case search
- Seller background check
- Approval check by survey

## Value and duty

What it is worth and what it costs to register.

- Guideline value by street
- Guideline value by survey
- Stamp duty and registration fees
- Capital gains
- Floor space index
- Area unit converter

## Zoning and land use

What the plan says can happen on this land.

- Land use zone finder
- CMDA land use check
- Coastal regulation zone
- Master plan check
- Water bodies finder
- Airport height clearance

## Registers and directories

Who holds it, and which office keeps the record.

- Find your registering office
- Temple property check
- Waqf property check
- RERA register

**Every free tool**
/tools

**Services we run for you**
/services

**The LandLens suite**
/landlens/one

Verified RealEstate™

# Every claim in this document traces back to a government record.

- Legal opinions, due diligence and title verification
- Building plan, layout and sub-division approvals
- Completion and occupancy certificates, regularisation
- Escrow, negotiation and NRI property management
- Land survey, soil testing, architecture and construction

**Verified RealEstate**
3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India
**hello@verified.realestate**
+91 9996 12 9996

Prepared from the registers named on the page each finding sits on. Where a register could not be read, this document says so in its place rather than leaving the gap to be read as a clean result.